முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 5—10-56 | வெள்ளி | ஒலி 26

உதயசூரியன்

கருணாநிதி

நாடகம்

காட்சி: 5.

[தெரு—சம்யோஜிதம் பிள்ளை வீட்டில் கண்ணம்மாவைச் சந்தித்து விட்டு திரும்பும் கறுப்பன் வந்து கொண்டிருக்கிருன். ஒரு கூட்டம் கறுப்புச்சட்டை போட்டுக் கொண்டு, கையில் காங்கிரஸ் கொடியுடன் "காமராஜரை ஆதரிப்போம்! பச்சைத் தமிழர் காமராஜர் வாழ்க!" என்று ஒலி எழுப்பியவாறு ஊர்வலமாக அவன் எதிரே செல்கிறது. அதை வெறிக்கப் பார்த்தவாறு தன் வழியில் நடக்கிருன் கறுப்பன். அவன் எதிரே சிகப்புச் சட்டையணிந்த கம்யூனிஸ்ட் கந்தன் வருகிருன்.]

கந்தன் : அடேடே...என்ன தோழர்?

கறு : யாரு?...கந்தனு?...என்னுப்பா, சௌக்கியமா?

கந்த : சௌக்கியந்தான் தோழரே!

கறு : யார் இந்தக் கூட்டம்—கறுப்புச் சட்டை! காங்கிரஸ் கொடி!!

கந்த : தெரியலியா? ...... திராவிடர் கழகத்தார்!

கறு : திராவிடர் கழகமா?... என்னய்யா இது; இப்படி மாறிப்போய்ட்டாங்க!... இவ்வளவு பகிரங்கமா காமராஜரை ஆதரிக்கக் கிளம்பிட்டாங்க!...

கந்த : ஆமாம்பாவம்; இப்படி பகிரங்கமா ஆதரிக்கிறது எனக்குக்கூட பிடிக்கிலே!...

கறு : ஏன்; மறைமுகமாக ஆதரிக்கலாம்னு சொல்றியா?. நீங்க பெரிய ஆளுய்யா!...

கந்த : என்ன தோழர் அப்படி சொல்லிட்டீங்க?...

கறு: காங்கிரசுக்கும் திராவிடர் கழகத்துக்கும் கலியாணமே ஆயிட்டுது!...... நீங்க கள்ளக் காதல் பண்ணிகிட்டு இருக்கிங்க; அவ்வளவுதான்!

கந்த: எங்க கொள்கைகள், திட்டங்கள் எல்லாம் அடிக்கடி மாற்றப்படும்—ஏனென்ருல் நாங்கள் சர்வதேசக் கண்ணேட்டவாதிகள்!...மூலக் கொள்கையிலேகூட முரண்பாடு ஏற்படும்!...இந்த நாட்டுக்காக மாத்திரம் நாங்கள் கொள்கை வகுக்கவில்லை தோழரே!.......உலகத்திற்காகவே வகுக்கிறோம்—மார்க்ஸ் சொல்லுகிருர்...

கறு: போதும்—போதும், நிறுத்து!...மார்க்ஸ் சொல்ரார்! லெனின் சொல்ரார்! ஸ்டாலின் சொல்ரார்!... அதெல்லாம் வேண்டாம்—இப்ப நான் என்ன சொல்றேன்; நீ என்ன சொல்றே!...அதை வச்சுப் பேசு!...அவர் சொன்னுர். —இவர் சொன்னுர் அப்படிங்கிற மேற்கோள்களை எல்லாம் விவாதத்திற்கு தேவைப்படும் போது தான் கையாள வேண்டும்!...... மார்க்ஸ், லெனின் எழுதியவைகள் எல்லாம் என்ன, வேதமா? .... நம்ப நாட்டுக்குத் தகுந்தபடி அதிலே மாற்றம் செய்து கொள்ளக்கூடாதா?...

கந்த: என்ன தோழரே. ஆத்திரமாப் பேசுறீங்க?...

கறு: பின்ன என்னு?...எதுக்கெடுத்தாலும் ஏன் ரஷ்யாவுக்கு ஓடுறீங்க?...

கந்த: எது; வைத்யம் செய்து கொள்ள எங்க தலைவர்கள் போனுர்களே; அதைப் பத்திச் சொல்றீங்களா?

கறு: அட, அது இல்லய்யா!... அது போனுல் எனக்கு என்ன?...நாதியற்ற பாட்டாளிகளின் தலைவர்கள்—நாடு விட்டு நாடு செல்வார்கள்; வைத்யத்திற்கு! நான் சொல்ல வந்தது அதுவல்ல!...ரஷ்யத் தலைவர்கள் இந்தியாவுக்கு வந்து, இங்கேயிருந்து நேரு ரஷ்யாவுக்குப் போய் வந்தவுடனே.......உங்க கொள்கைகளை யெல்லாம் அடியோடு மாற்றிக்கிட்டீங்களே; அதைச் சொல்றேன்!

கந்த: சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு, திட்டங்களை அமைத்து, வளைந்து கொடுத்தாவது, குனிந்து கொடுத்தாவது கட்சியை வளர்க்க வேண்டுமென்பதே எங்கள் நோக்கம்!...

கறு: அப்ப; கட்சி வளராது! எங்க காங்கிரஸ் மாதிரி தனிப்பட்ட ஆட்கள் தான் சிலபேர் வளருவாங்க!...

கந்த: ஏன் தோழரே!...நீங்ககூட கொஞ்ச நாளாய் காங்கிரசைப் பத்தி அதிருப்தியா பேசிகிட்டு இருக்கிங்களே!...

கறு: கொஞ்ச நாளா என்ன?... கொடியை செங்கோட்டையிலே ஏத்துனுங்களே; அன்னையிலேருந்து நான் ஒரு மாதிரி ஆயிட்டேன்!....கந்தா!.... காங்கிரசுக்கும் உங்க கம்யூனிஸ்டுக்கும் தற்சமயம் ஒரே ஒரு வித்தியாசந் தான்!

கந்த: என்ன தோழரே அது?

கறு: உயிரோட இருக்கிறவரையிலும் திட்டிவிட்டு, செத்தபிறகு பாராட்டுகிறோம்......நாங்கள்!...... ஆனுல் நீங்களோ; உயிரோட இருக்கிறவரையிலே பாராட்டிவிட்டு, செத்தபிறகு அணு அணுவாகச் சித்திரவதை செய்து அவமானப் படுகுழியிலே தள்ளுறீங்கப்பா ஆளை!...

கந்த: யாரை?

கறு: நாங்க பாரதியாரை! நீங்க ஸ்டாலினை!!

கந்த: உண்மையை உலகுக்கு அறிவித்துத்தானே ஆக வேண்டும்!

கறு:—நிச்சயமாக! ... ஆனுல் இவ்வளவு தாமதமாக அறிவிக்கக் கூடாது!...... அந்த மனிதன் உயிரோடு இருக்கும்போதே அறிவித்து, அவரை ஆட்சி பீடத்திலிருந்து துரத்தியிருக்க வேண்டும்.

கந்த: அப்போது உண்மையை வெளியிட்டிருந்தால் எல்லோருடைய உயிருக்கும் ஆபத்து!

கறு: ஓகோ!...அதற்காகப் பயந்து அநியாயத்தை வாழவிட்டார்களா?...... உயிருக்கு ஆபத்து வரும் என்ற அச்சம் தோன்றியிருந்தால் ஜார் பரம்பரை ரஷ்யாவை விட்டுத் தொலைந்திருக்காது தம்பீ! ......இனிமேலாவது இப்படிச் சொல்லாதீர்கள்; உயிருக்குப் பயந்து சும்மாயிருந்து விட்டார்கள் என்று! ஸ்டாலினுடைய கல்லறையிலேகூட கதறி அழுதவர்கள் திடீரென்று

❊ தொடர்ச்சி 12-ம் பக்கம்

ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?

வினா: "தமிழகம் செழிப்படைய வேண்டுமானால் அதற்குத் திராவிடஸ்தான் பரிகாரம் அல்ல; ஐக்கிய இந்தியாவின் அங்கமாகத் தமிழ்நாடு திகழவேண்டும்" — இதைவிட்டு திராவிடஸ்தான் கேட்பது தேவையற்ற கோரிக்கையல்லவா?

இப்படி ஒரு வினாவினை எழுப்பியிருக்கிறார், பஞ்சாயத்தார்!

இது ஒன்றும் புதிய கேள்வியல்ல; பண்டித நேரு முதல் 'பாரதமாதாவுக்கு ஜே' போடும் தொண்டன் வரை அனைவரும் நம்மை நோக்கி எழுப்பிக் கொண்டிருக்கும் புளித்துப்போன கேள்வி இது!

ஏக இந்தியா—

ஐக்கிய இந்தியா—

—புதிய நாமகரணத்தைச் சூட்டி, தென்னகத்திலே துளிர்விட்டு, பெரிய தருவாக வளர்ந்திருக்கும் பிரிவினைக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காக உபயோகிக்கப்படும் பழைய அஸ்திரம்தான், இது!

இதில் இன்னொன்றையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஏக இந்தியா—என்று அவர்கள் குறிப்பிடும்போது, இந்தியா இப்போது ஏகமாக—அதாவது ஒன்றாக இல்லை; ஏராளமாக—அதாவது பலவாக இருக்கிறது என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டவர்களாகிறார்கள்.

அதேபோலவே ஐக்கிய இந்தியா—என்று சுட்டிக் காட்டும்போது இன்றைய இந்தியாவில் ஐக்கியம் இல்லை—என்பதையும அவர்கள் ஆதரிக்கின்றவர்களாக ஆகிறார்கள்.

ஆக, நமது பிரிவினையை எதிர்ப்பவர்கள் இல்லாத ஒன்றிற்காக வீண் கூக்குரல் எழுப்புகின்றனர் என்பது, விழி இரண்டும் பழுதாகாதவன் முன்னே நிற்கும் இமயம் போல் தெளிவாகப் புலனாகிறது.

ஏனெனில் இந்தியா இனத்தால்; மொழியால்; கலையால்; கலாச்சாரத்தால் — என்றுமே ஒன்றாக; ஐக்கியமாக இருந்ததே கிடையாது!

"இந்தியா — என்பது இப்போது இல்லை; அது எப்போதும் இருந்ததும் கிடையாது"—1888-ம் ஆண்டிலே சர் ஜான் ஸ்ட்ராச்சே கூறினார், இப்படி!

"இந்தியாவைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய முதலும், முக்கியமுமான விஷயம் என்னவென்றால் இந்தியா என்பது இப்போது இல்லை; அது எப்போதும் இருந்ததும் கிடையாது. ஐரோப்பிய எண்ணங்களின்படி அரசியல், சமுதாய, மத ஒற்றுமை கொண்டதாகச் சொல்லப்படுகிற இந்தியா என்று எந்த நாடும் கிடையாது; நாம் அதிகமாகக் கேள்விப்படுகிற இந்தியா என்ற நாடும், இந்தியாவின் மக்கள்—என்பவர்களும் இல்லாத விஷயமே"

—இதுதான் சர் ஜான் ஸ்ட்ராச்சேயின் திட்ட வட்டமான வாதம்!

'இந்தியா என்பது கிடையாதா? யாரோ அட்லாஸ் புத்தகத்தைப் பார்க்காத அப்பாவியின் அசட்டு வார்த்தைகள்'—என்று எண்ணிவிடப் போகிறார்கள், திராவிடஸ்தான் வேண்டாமென்னும் தீரர்கள்!

இந்தியா என்ற ஒரு நாடு இல்லையென்றால் அதற்கு ஒரு நாட்டுக்குரிய லட்சணங்கள் இல்லையென்று அர்த்தம்! அது பல நாடுகளை உள்ளடக்கிவைத்திருக்கிற ஒரு கண்டம் என்று அர்த்தம்! அது இன்றுமட்டுமல்ல; என்றுமே ஒன்றாக—ஒரு நாடாகத் திகழ்ந்ததில்லை—என்று அர்த்தம்!

இந்த வாசகங்களுக்குப் பொழிப்புரை தருவதைப்போல சர் ஜான் சீலி என்பவர் எழுதியிருப்பதைப் பாருங்கள்:

"இந்தியா ஒரு அரசியல் பெயரல்ல; ஐரோப்பா அல்லது ஆப்பிரிக்கா என்பதைப் போல அது ஒரு பூகோளப் பெயராகும். அது ஒரு நாட்டுக்குரிய பிராந்தியத்தையோ அல்லது மொழியையோ பெற்றிருக்கவில்லை; ஆனால் அது பல நாடுகளுக்குரிய பிராந்தியங்களையும், பல மொழிகளையும் கொண்டிருக்கிறது!"

மேலும் அவர் கூறுகிறார்:

"இந்தியா ஒரு தேசிய இனத்தைக் கொண்டது என்கிற எண்ணமானது, அரசியல் விஞ்ஞானம் நிச்சயம் அகற்றப்பட வேண்டுமென்று குறிவைத்திருக்கிற ஆபாசமான தவறை அடிப்படையாகக் கொண்டதாகும்!"

(1) இந்தியா ஒரு தேசிய இனத்தைக் கொண்டதல்ல; அதனால் இந்தியாவில் வசிப்பவர்கள் அத்தனை பேரும் பற்பல தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள்!

(2) இந்தியா என்பது அரசியல் பெயரல்ல: பூகோளப் பெயர்! ஐரோப்பா; ஆப்பிரிக்கா என்பதைப்போல!

(3) ஐரோப்பாவில் எங்ஙனம் பிரான்சு; ஜெர்மனி, போலந்து, ஸ்பெயின்; பின்லாந்து போன்ற பல தேசிய இனங்கள் இருக்கின்றனவோ, அது போலவே இந்தியா என்கிற கண்டத்திலும் பல தேசிய இனங்கள் உள்ளடங்கியிருக்கின்றன.

எப்படி ஆப்பிரிக்காவில் தென் ஆப்பிரிக்க யூனியன்; எத்தியோபியா; எகிப்து; லிபியா; அல்ஜீரியா; மொராக்கோ போன்ற நாடுகள் இருக்கின்றனவோ, அது போலவே இந்தியாவும் பல நாடுகளாகப் பிரிய வேண்டிய ஒரு பூகோளப் பிராந்தியமாகும்!

அந்த பூகோளப் பிராந்தியத்திலே பல இனங்கள்; பல மொழிகள்; பல கலாச்சாரங்கள் நிலவுகின்றன!

அந்த கண்டத்திலே வாழ்வோர் அனைவரும் நடையால்; உடையால்; பாவனையால் ஒருவருக்கொருவர் முற்றிலும் மாறுபட்டவர்கள்!

—எனவே, 'ஒரு தேசிய இனம்; அதற்கென ஒரு தேசம்' என்று இருபதாம் நூற்றாண்டின் அரசியல் முன்னேறிக் கொண்டிருக்கும்போது, பல தேசிய இனங்களை அடக்கி, அவர்கள்மீது ஒரு அரசியல் அமைப்பைத் திணித்திருக்கும் இந்த ஏற்பாடானது ஒரு 'ஆபாசமான' அஸ்திவாரத்தின் மீது எழுப்பப்பட்டதாகும்!

அதனால் இந்தக் கொள்கை தற்கால அரசியல் விஞ்ஞானத்தின் முன்னே தலை நிமிர்ந்து நிற்கமுடியாத ஒன்றாகும்!

—இவையனைத்தும்தான் மேற்கூறியவர்களின் எடுத்துக்காட்டிலிருந்து பெறக்கூடிய கருத்துக் கதிர்கள்!

ஆனால் இதை மறைக்க முயலும் ஏகாதிபத்தியப் பித்தர்களோ தாங்கள் ஒரு ஆபாசமான அஸ்திவாரத்தின்மீது ஒரு கற்பனை ஐக்கியத்தைத்தான் நிறுவ முயலுகிறார்கள் என்பதையும் மறந்து விடுகிறார்கள்.

ஆரியராவது; திராவிடராவது—கூறுகிறார், ஆச்சாரியார்!

நாமாவது திராவிட மொழிகள் வழங்கும் தமிழ், தெலுங்கு, கேரள, துளுவப் — பகுதியில்தான் திராவிடர்கள் வாழ்கின்றனர், இரத்தக் கலப்பு இன்றி—எனக் கூறுகிறோம்!

ஆனால் 1901-ம் ஆண்டிலே சென்சஸ் கணக்கெடுத்த சர் ஹெர்பர்ட் ரிஸ்லி என்பவரோ, தென் இந்தியாவிலும், மத்திய மாகாணத்திலும், சோட்டா நாக்பூரிலும் கூட திராவிட இனம் வாழ்வதாகக் கூறியிருக்கிறார்!

தென்னகத்திலே வாழ்வோர்தான் திராவிட இனம் என்று நாம் கூறுவதைக் கேட்டே சீறிப் பாய்வோர் இதற்கு

❋ தொடர்ச்சி 8-ம் பக்கம்

தூத்துக்குடியில்!

"நான் உங்களில் ஒருவன்; நீங்கள் தோழரைப் பறிகொடுத்தத் துக்கத்தில் மூழ்கியிருந்தால், நான் தம்பியைப் பறிகொடுத்த தமையனின் பரிதாப நிலையில் இருக்கிறேன். உங்களை நான் தேற்ற முடியும் என்பதைக் காட்டிலும், என்னை நீங்கள் தேற்றுவதைத்தான் நான் எதிர்பார்க்கிறேன். சாமியின் இடத்தை நிரப்ப நீங்கள் எல்லோரும் முயன்று என்னைத் தேற்றுங்கள்"

சென்னை 5--10--56 வெள்ளி

ஆறே போதும்!

எதிர்க் கட்சிகள் ஜனநாயக மாளிகையைத் தாங்கி நின்றிடும் தூண்கள். உறங்கிக் கிடப்போரை; வாய் திறக்க நடுங்கி நிற்போரை; ஆமைகளை; ஊமைகளை யெல்லாம் தட்டி எழுப்பி; பாரீர், அந்தப் பழுதினை என்று சுட்டிக் காட்டிட வேண்டிய சுந்தர அமைப்பு.

பாசிச, நாஜிச, கம்யூனிச நாடுகளில்தான் எதிர்க் கட்சிகள் இயங்குவதற்கு இடம் கொடுக்கப் படுவதில்லை.

இட்லரும், முசோலினியும் தங்கள் தொண்டர்படை யென்னும் குண்டர் படையினை ஏவி; பதவிக் காலத்தில் எதிர்த்தோரை யெல்லாம் பீரங்கிக் குழலில் நிறுத்தி, சுட்டு வீழ்த்தி, அந்த நாடுகளில் எதிர்க் கட்சியே இல்லாதவாறு செய்து விட்டனர். அதே போலத்தான் கம்யூனிஸ்ட் நாடுகளிலும்—அங்கே பொதுவுடமைக் கட்சியைத் தவிர வேறு கட்சிகளே இயங்குவது கிடையாது.

இட்லர் ஜனநாயகத்தின் வைரி; எனவே எதிர்க் கட்சிகளைப் பற்றிக் கவலைப்படவில்லை.

முசோலினி முற்றிய ஏகாதிபத்தியப் பித்தன்; எனவே மாற்றுக் கட்சிகள் அவன் ஆட்சிக் காலத்தில் வாழ முடியவில்லை.

ஆனால் பண்டித நேருவோ குடியாட்சி என்னும் நெருப்பில் புடம் போட்டு எடுக்கப்பட்ட பத்தரை மாற்றுத் தங்கம்.

ஜனநாயகத்தை வளர்ப்பதற்காகத்தான் அவரது கட்சியினர் இந்திய உபகண்டத்தையே கொள்ளைக்கார வெள்ளையர்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டிருக்கின்றனர்—என்றெல்லாம் கூறப்படுகிறது இந்நாளில்!

இருந்தும் அவர் ஆட்சிக் காலத்திலே இந்த நாட்டில் எதிர்க் கட்சிகள் ஒழுங்கு பெற இயங்கிட முடிகிறதா?

இல்லை; அதற்குக் கதரணிந்தோர் சிறிதும் விரும்புவதாகவே தெரியவில்லை.

இட்லர் எவ்வளவு இடையூறுகளை எதிர்க் கட்சிகளின் பாதையில் தவழவிட்டானே; முசோலினி எவ்வளவு பெரிய இமயங்களை அவர்கள் வழியிலே, குறுக்கே நிறுத்தினானே அவ்வளவையும் செய்கின்றனர், ஆதிபத்தியப் பேராசை கொண்டலையும் அகிம்சா மூர்த்திகள்!

காலிகள் ஏவப்படுவர்; போலிசார் பிரயோகப் படுத்தப்படுவர்; எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களது தனிப்பட்ட செல்வாக்கிற்கு படுகுழி தோண்டப்படும்; அவர்களுக்கு இல்லாத இடையூறுகள் யாவும் ஏற்படுத்தப்படும்; பித்தலாட்ட வழிமுறைகள் அத்தனையும் பயன்படுத்தப்படும்.

ஆனால் அடிக்கடி பேசிக்கொண்டேயிருப்பர்; இந்த நாட்டிற்கு பொறுப்புள்ள எதிர்க் கட்சிகள் தேவை! தேவை!!—என்று.

மேடைகளிலிருந்து இந்தப் பேருபதேசங்கள் புறப்படும்போதே, அந்தப் பின்னணியில் மாற்றுக் கட்சிகளுக்குப் பாடை கட்டிடும் பணியும் வெகு மும்மரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

இதற்கு சமீபத்திய சான்றாகத்தான் பண்டிதருடைய பேச்சு அமைந்திருக்கிறது.

எதிர்க் கட்சிகள் ஒரு ஐக்கிய முன்னணியை ஏற்படுத்த முயல்வது பற்றிக் குறிப்பிடும்போது அவர் கேட்டாராம்:

“பத்து முடவர்கள் சேர்ந்து ஒரு முழு மனிதனாகிவிட முடியுமா?”—என்று!

காங்கிரசை எதிர்க்கும் கட்சிகள் அனைத்தும் முடவர்களுக்குச் சமானமாம்!

அவர்கள் எவ்வளவுதான் ஒன்று சேர்ந்தாலும் ஒரு முழு மனிதனுக்கு—அதாவது காங்கிரசுக்கு—சமானமாக ஆகிவிட முடியாதாம்!

—இட்லர்; முசோலினி போன்றோரின் சர்வாதிகார வாசனை வீசுகிறது, இந்த வார்த்தைகளிலே!

எதிர்க் கட்சிகள் அத்தனையும் முடமாம்!—பாவம்; அவர் கட்டிக் காத்திடும் காங்கிரஸ் ஒரு குருடு என்பதை ஒப்புக்கொள்ள அஞ்சும் பண்டிதர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

முடமானவர்களாலாவது நாட்டு நடப்புகளை நேரில் கண்டறிய முடியும்!

ஆனால் காங்கிரஸ் என்னும் முழு மனிதனுக்கோ பார்வை பழுதானது மட்டுமின்றி, சித்தத்திலும் சிறிது கோளாறு ஏற்பட்டிருக்கிறது.

அதனால்தான் பாவம்; சர்வாதிகாரிகள் சென்ற சரிவுப் பாதையிலே சென்று இந்த நாட்டின் எதிர்க் கட்சிகளையே குழி தோண்டிப் புதைத்திடும் வேலையில் இறங்கியிருக்கின்றனர், தங்களை முழு மனிதர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கும் மூட மனிதர்கள்!

ஆனால் அதே நேரத்தில் இந்த எதிர்க் கட்சிகளில் சில காங்கிரசுடன் கூட்டு சேர்ந்தால் மட்டும் அவைகளை முழு மனிதர்கள்—என்று பாராட்டத் தயங்க மாட்டார், பஞ்சசீலம் பேசிடும் பண்டிதர்!

எதிர்க் கட்சிகள் இந்நாட்டில் நடத்தப்படும் விதம் இவ்விதம் இருக்கையில்தான் வேலூர் நகரசபை மண்டபத்தில் அறிஞர் அண்ணா அவர்களின் படத்தைத் திறந்து வைக்கும்போது திரு. பி. டி. ராஜன் அவர்கள் தமிழகத்தின் மாபெரும் எதிர்க் கட்சியாம் தி. மு. கழகத்தைப் பற்றி சில நல்ல கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்:

“இன்றுள்ள நிலையில் எந்தக் கட்சிக்கு எதிர்க் கட்சியாகப் பணியாற்றுவதற்குத் தகுதி யிருக்கிறது?

“கம்யூனிஸ்ட்டுகளுக்கு 1951-ல் ஒடிந்த இடுப்பு இன்னும் நிமிரவே முடியவில்லை.

“பி. சோ. கட்சியினர், சோஷலிஸ்டுக் கட்சியினர் எல்லாம் காங்கிரசிலிருந்து வந்தவர்கள். கம்யூனிஸ்ட்டுகளோ, ‘இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காகக் காங்கிரசுடன் ஒத்துழைக்கலாமா?’ என்ற நிலைக்கு வந்து விட்டனர்.

“இந்த நிலையில் நாட்டின் பொதுவான அரசியல் நிலையை ஆராய்ந்து பார்த்தால், அண்ணாதுரையின் தி. மு. கழகத்தைத் தவிர வேறெந்தக் கட்சியும் நல்ல எதிர்க் கட்சியாகப் பணியாற்ற முடியாது!”

—இதைக் கூறி விட்டு மேலும் சில நல்ல கருத்துக்களையும் வெளியிட்டிருக்கிறார்:

“‘தி. மு. கழகத்தவரில் ஒரு அரை டஜன் பேர்களை மட்டும்—அதிகமாக வேண்டாம்; ஆனால் அவர்கள் அனைவரும் நல்ல பொறுக்கு மணிகளாக இருக்க வேண்டும்—நல்ல சக்தி, திறமை, அறிவாற்றல், அடக்கம் உள்ளவர்களாக ஆறு பேர்களை மட்டும் தமிழ் மக்கள் சட்டசபைக்கு அனுப்பினால் அதுவே போதும்—நல்லாட்சிக்கு வழி கோலுவதற்கு!”

—பி. டி. ராஜன் அவர்களின் படப்பிடிப்பு இது!

சட்டசபைக்கு தி. மு. க. வின் சார்பாக ஆறுபேர்களே போதுமென்கிறார்.

ஆமாம்; ‘சீட்டுகள்’ ஆறாக இருந்தாலும், அவை அத்தனையும் தேசியத்தாரை வெட்டி வீழ்த்திடும் துருப்புச் சீட்டுகளாகத்தான் இருக்கும் என்பதை “ஆறு போதுமா?”—என்று அங்கலாய்ப்போருக்கு எடுத்துக்கூற விரும்புகிறோம். ●

விரைவில்!...
உணர்ச்சி மிகுந்த சித்திரம்
கருணாநிதி எழுதும்,
காதல்—வீரங் கலந்த உணர்ச்சிமிக்க தொடர் சித்திரம்!
சுருளிமலை
‘முரசொலி’யில் ஆரம்பமாகிறது விரைவில்!

தஞ்சை ஏ. வி. பதி வெட்டப்பட்டார்!

எதிரிகள் கைது செய்யப் பட்டனர்.

தஞ்சை மாவட்ட தி. மு. கழகப் பொருளாளர் தோழர் ஏ. வி. பதி அவர்கள் 30—8—56 இரவு பயங்கர ஆயுதத்தால் தாக்கப்பட்டார். அவரைத் தாக்கிய அருணாசலம், வயிரக்கண்ணு. துரை, குருசாமி ஜெகந்நாதன் ஆகிய ஐந்து பேரும் போலீசாரால் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுதலை செய்யப் பட்டிருக்கின்றனர்.

இந்த ஐந்து பேரில் அருணாசலம் என்பவர், சென்ற நகரசபைத் தேர்தலில் தோழர் பதிக்கு எதிராக வேலை செய்தவரென்றும், இவர்கள் காங்கிரஸ் கட்சியினர் அல்லது அனுதாபிகளென்றும் தெரியவருகிறது.

தோழர் ஏ. வி. பதிக்கு வயிற்றிலும், தலையிலும் காயங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

நகரில் யாதொரு விதமான கலவரமும் ஏற்படாமலிருக்க மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ பொதுக்குழு உறுப்பினர் பெத்தண்ணன், நகரச் செயலாளர் பட்டு, மற்றுமுள்ள தோழர்கள் அமைதி காத்து வருகின்றனர்.

பழிச் சொல்

✻ 9-ம் பக்கத் தொடர்ச்சி

தன்னிரு காதுகளையுமே நம்ப முடியவில்லை. "ஆமாங்க, நான் சொல்வது முழுக்க முழுக்க உண்மை. முற்போக்கு எண்ணமும் சீர்திருத்த நோக்கமும் கொண்ட நான் இந்த ஊராரின் ஏச்சுப் பேச்சுகண்டு அஞ்சி விட மாட்டேன்." என்றான் சந்திரன். ஆனந்தம், எல்லையில்லா ஆனந்த மடைந்தார்!

சுந்தரி—சந்திரன் திருமணம் நடைபெறப் போவது அறிந்ததும், மூடியிருந்ததன்வாயைத் திறந்து கொண்டது ஊர். ஆசிரியர் சந்திரனை "அறிவுக் கடல்" என்று போற்றிய அதே வாய், "அவனா? முட்டாள்!" என்று ஏதேதோ ஏளனச் சொற்களைக் கக்கியது! அது கண்டு சந்திரன் சிரித்தான்! சுந்தரி—சந்திரன் திருமணம் எளிய முறையில் நடைபெற்றது. அவர்களது திருமணத்துக்கு ஊரார் பெரும்பாலோர் செல்லவில்லை!

ஒருமனப்பட்ட புதுமணங்களின் இல் வாழ்வு சிறப்புற நடந்து கொண்டிருந்தது. சுந்தரியின் சுந்தர உருவமும், அன்பு மொழியும் அவனை இன்ப உலகுக்கு இழுத்துச் சென்று விட்டது. அங்கே அந்த அன்புத் தம்பதிகள் ஆடி ஓடி விளையாடினர்; ஏச்சுப் பேச்சு அவர்களை எட்டிப் பார்க்கக்கூட அஞ்சியது!

இன்பமும் துன்பமும் இரண்டறக் கலந்ததுதானே மனிதனது வாழ்க்கை? மகிழ்ச்சிக் கடலிலே இன்ப நீச்சலடித்துக் கொண்டிருந்த அவர்கள், தங்கள் வாழ்விலும் புயல் வீசும் என்பதையே மறந்து விட்டனர்!

அன்று பள்ளி ஆண்டு விழா. மாலையில் மாணவ, மாணவியர் கலந்து கொள்ளும் போட்டி விளையாட்டுகள் பல நடைபெறும். ஊர் பிரமுகர்களும், பொது மக்களும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிப்பார்கள். ஆகவே அந்த விழாவுக்குச் செல்ல தலைமை ஆசிரியன் என்ற முறையில் தன்னை விசேஷமாக அலங்கரித்துக் கொண்டான் சந்திரன். அத்துடனில்லாது தன் மனைவி சுந்தரியையும் வற்புறுத்தி விழாவுக்கு அழைத்துச் சென்றான். இந்த ஜோடியைக் கண்டதுமே பலர் தங்களுக்குள் ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டனர். இதைக் கவனித்தும், கவனியாதவன் போல, ஒரு புறம் சென்று, தன் மனைவியுடன் அமர்ந்து கொண்டு விழாவைக் கவனித்தான் சந்திரன்.

விளையாட்டுகள் நடந்து முடிந்தன. போட்டியில் வெற்றி பெற்றோரின் பெயர்களை வாசித்து, அந்த மாணவ மாணவிகள் வந்து பரிசுகளைப் பெற்றுச் செல்லுமாறு கூறினான். அவ்வளவுதான்! தோல்வி பெற்ற மாணவர்கள் சிலர் கூக்குரலிட்டனர்; அதைத் தொடர்ந்து, கூட்டத்தின் ஒரு பகுதியினர் அவர்களுடன் சேர்ந்துகொண்டு ஏதேதோ பேச ஆரம்பித்தனர். அமைதியாக இருக்கும்படி வேண்டிக் கொண்டான், சந்திரன்; ஆனால் கூச்சலோ அதிகமாகிக் கொண்டிருந்தது.

"உங்களுடைய முடிவு சரியில்லை" என்றான் ஒருவன். "அவனுக்கு என்னடா தெரியும்? விபச்சாரியைக் கட்டியவனுக்கு நீதி புலப்படுமா?" என்றான் மற்றொருவன். இன்னும் ஏதேதோ ஆபாச வார்த்தைகள் அனைத்தையும் கக்கியது கூட்டம். சந்திரனால் இந்த அவமானத்தைத் தாங்கமுடியவில்லை. திரும்பி தன் மனைவியை நோக்கினான். சுந்தரியோ, சேலைத் தலைப்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள். வேதனை தாள முடியாத அவன் மனைவியை அழைத்துக் கொண்டு கூட்டத்தை விட்டு வெளியேறினான்.

வழிந்தோடும் கண்ணீரைத் துடைக்கக் கூட நினைவற்று வேதனையால் நடந்து கொண்டிருந்தாள் சுந்தரி. அவளை ஏதேதோ சொற்களால் தேற்றிய வண்ணம் உடன் சென்று கொண்டிருந்தான் சந்திரன். அவனது தேறுதல் வார்த்தைகள் ஆறுதலை உண்டாக்கவில்லை சுந்தரிக்கு. அவளது நினைவலைகள் எங்கோ சுற்றிச் சுழன்று கொண்டிருந்தன.

அன்று......

நடுநிசி. படுக்கையில் திரும்பிப் படுத்த சந்திரன், தன்னெதிரே ஜுவாலை விட்டு எரியும் நெருப்பு உருவத்தைக் கண்டு, 'ஆ' வெனக் கூச்சலிட்டான். ஆம்! அவனது ஆசை மனைவி சுந்தரியின் உடலை தீ நாக்குகள் நக்கிச் சுவைத்துக் கொண்டிருந்தன! சந்திரனது கூச்சலைக் கேட்டு ஓடி வந்த சுந்தரியின் பெற்றோரோ வீரிட்டலறினர். எப்படியோ நெருப்பு அணைக்கப் பட்டது; ஆனால் சுந்தரியின் உயிர் அவளது உடலை விட்டு அதற்கு முன்னமே நீங்கி விட்டது!

தேன் தமிழ்க் காவியமே! தெவிட்டாத செங்கரும்பே! வண்ணச் சிலையே! வடித்தெடுத்த ஓவியமே!- என்று சந்திரனால் புகழப்பட்ட சுந்தரி வெந்து கருகிப்போன பிணமாகக் கிடந்தாள்! அவளை எடுத்துத் தன் மடியில் கிடத்திக் கொண்டு அழுதான்—கதறினான், சந்திரன்!

படுக்கையில் தலையணை மீது ஒரு கடிதம் இருந்தது. அதை எடுத்துப் படித்தான் சந்திரன். சுந்தரி, தன் கணவனுக்காக கடைசியாக விட்டுச் சென்ற கடிதம் அது.

அன்புள்ள அத்தான்!

இந்த உலகம் மிக மிக விசித்திரமானது. உண்மைக்கு உயர்வுதர மறுத்து, மூடத்தனத்துக்கும், முட்டாள் கொள்கைகளுக்கும் மகுடமணிந்து மகிழும் இந்த உலகைப் பற்றி நான் அப்படித்தான் நினைக்கிறேன்.

எவனோ வெறியன் ஒருவனது மிருகச் செயலால், வேதனைச் சித்திரமாக ஆக்கப்பட்டேன் நான். அவன் செய்த கொடுமைக்காக நான் தண்டனை அனுபவிப்பதா? கற்பு என்பது பெண்ணுக்கு மட்டும் இல்லை; ஆணுக்கும் உரியது தான்! என்று நீங்கள் பல முறை சொல்லியுள்ளீர்கள். அவனது வெறிச் செயலைக் கண்டித்து, அவனைத் தேடித் தண்டனை யளிக்க சக்தியற்ற சமுதாயம், என்னை மட்டும் தூற்றித் திரிவதையே தொழிலாகக் கொண்டிருப்பது ஏன்?

அத்தான்! இன்று மாலை பள்ளியில் பலர் முன்னிலையில் தாங்கள் அவமானப்பட நேர்ந்தது என்னாலன்றோ? உத்தமரான உங்களுக்கு இழிவைத் தேடித்தரவா நான் உங்களுக்கு மனைவியானேன்? நான் அழிந்துவிட்டால்—என்னையே அழித்துக் கொண்டால் அப்போதாவது தங்கள் மீது வீசப்பட்டுள்ள பழிச் சொல்—துடைக்கப்பட்டு விடுமல்லவா?

எனது முடிவு கண்டு "அவசரக்காரி" என்று கூறுவீர்கள்; ஆழ்ந்து முடிவு செய்த பின்புதான் நான் தற்கொலை செய்து கொள்வது என முடிவு செய்தேன். வாழ்வின் சுவையறியாது, வேதனையால் செத்துக் கொண்டிருந்த எனக்கு புது வாழ்வளித்தவர் நீங்கள். புயலெனச் சீறி எழுந்த ஊராரின் ஏச்சுப் பேச்சுக்களை என் பொருட்டு மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட தியாகி நீங்கள். என்றாலும் என்னை உங்களுடன் வாழ விடவில்லை. இந்த சமுதாயம். உங்களுக்கு எனது கடைசி வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, கடிதத்தை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

என்றும்,
உங்கள் அன்புத் துணைவி
சுந்தரி.

"இறந்தவர் பிழைப்பதில்லை"—என்று வேதாந்தம் பேசியது உலகம். வேதாந்தத்தால் தீர்ந்துவிடுவதா சந்திரனின் வேதனை?

✻

வண்டிக்கார வரதப்பன் தான் சொல்லி வந்த கதையை ஒரு கேள்விக் குறியுடன் முடித்து விட்டு, என்னை ஏறிட்டு நோக்கினார். எனதுள்ளமோ, ஊராரின் பழிச் சொல் ஒரு பெண்ணின் வாழ்வைச் சூறையாடி விட்டதே என எண்ணிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது.

"அந்தப் பெண் சுந்தரியின் சவ ஊர்வலந்தானா இது?" என்றேன். எங்கோ கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போல இருந்தது எனது குரல்.

"ஆமாம்!"—ஒரே வார்த்தையில் பதில் சொன்னார் பெரியவர்.

தூரத்தில் ரயில் வண்டி வருவதற்கு அறிகுறியாக ஊது குழல் சத்தம் கேட்டது. நான் டிக்கெட் வாங்குவதற்காக எழுந்தேன்.

மூலம் : மாப்பசான்

தழுவல் : க. இரத்தினம்

பொழுதுபோக்கு

'டெமாஸ்தனீஸ்'

சவூதி அரேபியாவிற்குச் செல்லுமுன் ஒரு பொதுக் கூட்டத்தில், டெல்லியில் பேசும்பொழுது பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார் :

"வரப் போகின்ற தேர்தலில் ஓட்டுப் பெறவேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு நாட்டிலுள்ள சிறிய எதிர்க் கட்சிகளெல்லாம் ஒன்று கூடிக்கொண்டு, அற்ப விஷயங்களையெல்லாம் பெரிதாக்கி ஆளும் கட்சியைத் தாக்குகிறார்கள்"

'அற்ப விஷயம்' என்ற சொற்றொடருக்கு நேரு என்ன பொருள் கொள்ளுகிறாரோ தெரியவில்லை. வரிப் பணத்தை வகை தெரியா வழிகளில் பாழாக்குகிறார்களே — ஆடிட்டரிப்போர்ட்படி — அது அற்ப விஷயமா, அல்லது தூதராலயங்களில் ஏழை நாட்டுப் பிரதிநிதி என்பதையும் மறந்து 'அந்தஸ்து' காப்பாற்றப்பட அள்ளிவீசுகிறார்களே டாலரை, அது அற்ப விஷயமா ; அன்றி மொழி வழி மாகாணம் பிரிப்பதாகக் குழு அமைத்து, குழுவின் அறிக்கையைக் குளறுபடி செய்து, மக்கள் உரிமைக் குரல் எழுப்பினால் ஈவு இரக்கமின்றி சுட்டுத் தள்ளுகிறார்களே, அது அற்பவிஷயமா என்று எனக்கு விளங்கவில்லை. இம்மாதிரியான 'அற்ப விஷயங்களின்' பட்டியல் விரித்துரைக்கின் பெருகும். அகில உலகக் கண்ணோட்டத்திலேயே அரசியலை அமைத்துவிட்ட நேருவுக்கு உள்நாட்டு எதிர்க் கட்சிகள், அவை சுட்டிக் காட்டும் விஷயங்கள், அதுவும் சவூதி அரேபியாவுக்குச் செல்லும் வேளையில் அற்ப விஷயமாகத் தோன்றுவதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும் ?

❊

அதே பேச்சில் எதிர்க் கட்சிகள் கூட்டு முன்னணி அமைப்பதை நேரு கேலி செய்கிறார் :

"ஒற்றுமை பலம்தான். ஆனாலும் பத்து முடவர்கள் ஒன்று கூடினாலும், ஒரு முழு மனிதனுக்கு ஈடு கொடுக்க முடியாது"

காங்கிரஸ் கட்சியை முழு மனிதனாகவும், இதர கட்சிகளை முடவர்களாகவும் உருவகப் படுத்துகிறார் நேரு. அந்த உவமையை மேற்கொண்டு விரித்துரைத்திருப்பாரேயானால், நாமும் விளக்கமடைந்து தெளிவு பெற்றிருக்கலாம். என்ன காரணமோ, நேரு அதைச் செய்யவில்லை. ஜனநாயக அரசின் காவலரல்லவா, அதனால்தான் எதிர்க் கட்சிகளைக் கேலி செய்து ஒழிப்பதில் இவ்வளவு அக்கரை காட்டுகிறார். காங்கிரஸ் கட்சியைத் தவிர இதர கட்சிகளெல்லாம், பொருளாதார–சமுதாய அடிப்படைக் கொள்கையில் அமைந்தவை. கம்யூனிஸ்ட் கட்சியின் லட்சியம் வர்க்க பேதமற்ற சமுதாயம் காண்பது. சோஷலிஸ்ட் கட்சிகளின் லட்சியம் உற்பத்திச் சாதனங்களை நாட்டுடைமையாக்கிப் பெருவாரியான மக்களுக்கு அதிக பட்ச நன்மைகளைச் செய்வது. திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம், கம்யூனிஸ்ட் — சோஷலிஸ்ட் கட்சிகளின் அடிப்படைக் கொள்கைகளை ஒப்புக்கொள்வதோடு, இந்த நாட்டுக்கே உரிய சில தனிப் பிரச்சினைகளை முன்னிறுத்தி, பழைய சரித்திரத்தைக் காட்டி, வருங்கால நிலையை வரலாற்று உதவியால் உய்த்துணர்ந்து, இன விடுதலைப் போராட்டத்தை— நாடு மீட்கும் நற்பணியை— நடத்தி வருகிறோம். நேரு என்றுமே எதிர்க் கட்சிகளைப் புரிந்துகொள்ள முயன்றதில்லை.

அகில உலகப் புகழ் காதைச் செவிடாக்கிவிட்டது. கண்ணையும் குருடாக்குகிறது. பின் ஏன் எதிர்க் கட்சிகள் முடமாகத் தோன்றாது ?

நேருவை நாம் குறை கூறும் போதெல்லாம், விஷயமறிந்த காங்கிரஸ்காரர்கள் கூட (விஷயமறியாத காங்கிரஸ்காரர் வேறு இருக்கிறாரா என்றுதானே கேட்கிறீர்கள்— அவர்கள் எண்ணிக்கைதான் அதிகம்), நாம் ஏதோ நேருவின் பெருமையுணராமல்—அந்தஸ்து அறியாமல்—அறிவின் ஆற்றல் புரியாமல் — பேசுவதாக நினைக்கிறார்கள். தவறு தோழர்களே, தவறு. நேருவின் பெருமை இவர்களுக்குத் தெரிந்ததைவிட நமக்குச் சற்று நன்றாகவும், சொல்லப் போனால் ஆதாரப் பூர்வமாகவும் தெரியும்.

தந்தையின் அரசியல் போக்கு தனக்கு பிடிக்காத நேரத்தில் படே படே பேர்வழிகளெல்லாம் அவரை எதிர்க்கத் துணியாத நேரத்தில், மோதிலாலை எதிர்த்த ஜவஹர்லாலை நாம் அறிவோம் !

ஊரைப் பற்றியும் நாட்டைப் பற்றியுமே காங்கிரஸ்காரர்கள் சரியாகப் பேசத் தெரியாதிருந்த நாளில், உலகப் பிரச்சினைகளை அனுயாசமாக விவாதித்துத் தீர்மானங்கள் தீட்டிய நேருவை, காங்கிரஸ் வரலாறு நமக்குக் காட்டுகிறது !

லாகூர் காங்கிரசில் முழு சுயராஜ்ய லட்சியத்தை முழங்கிய நேருவும், கராச்சி காங்கிரசில் தொழிலாளரைக் காங்கிரசின் தோழனாக்கிய நேருவும், நம்முடைய மதிப்புக்குரியவர்கள் !

பாசிச அரக்கன் முசோலினி வருந்தியழைத்தும், அவருக்குப் பேட்டியளிக்க மறுத்த நேரு, உலக விடுதலை விரும்பிகளின் தோழராகக் கருதப் பட்டது நமக்குத் தெரியும் !

காங்கிரஸ் தலைவர்கள் 1942–ல் சிறைப்படுத்தப் பட்டவுடன், வேதனையால் வெகுண்டெழுந்த மக்கள், தண்டவாளங்களைப் பெயர்த்தும், தந்திக் கம்பங்களைச் சாய்த்தும். கிளர்ச்சி செய்து. அதன் காரணமாக குண்டுகளுக்கு இரையாகி, குண்டாந்தடியடிபட்டு சித்திரவதைக்குள்ளாகியும். காந்தியும் அப்பொழுது காங்கிரஸ் தலைவராயிருந்த ஆசாதும், புரட்சி செய்த மக்களை காலிகள் என்றும், வெறியர்கள் என்றும் கூறி, கலகத்திற்கும் தங்களுக்கும் பொறுப்பில்லை எனக்கூறி, கடமை மறந்து கண்ணியமற்ற வகையில் விடுதலை வீரர்களைக் காட்டிக் கொடுத்த நேரத்தில், சிறையிலிருந்து வெளிவந்ததும் சிங்கமெனச் சீறி கலகத்திற்கு முழுப் பொறுப்பையும் தனிப்பட்ட முறையில் நானே ஏற்றுக் கொள்ளுகிறேன்—எனக் கூறிய நேரு நாட்டின் விடுதலைக்குப் போராடும் எல்லோருடைய நன் மதிப்புக்கும் உரியவர் என்பதையும் அறிவோம் !

கறுப்பு மார்க்கெட்காரர்களை கழுமரத்தில் தொங்க விடுவேன் என்று கூறிய நேருவுக்கு நமது மரியாதை !

பொதுவுடமைத் தத்துவமே நாட்டின் விமோசனம் என்று கூறிய நேருவுக்கு நமது வாழ்த்து !

ஆங்கில உரை நடை எழுதுவதில் மிகச் சிறந்த பத்து பேரில் நேருவும் ஒருவர் என்பதில் நாம் மகிழ்கிறோம். உலக அரங்கில் சமாதான தீபத்தை ஏற்றி வைக்க உழைக்கும் அவருக்கு, நம் வாழ்த்து !

ஆனால்...

விடுதலைப் போராட்ட காலத்தில் வாழ்ந்தாரே நேரு...அவரோடு நமக்கு வம்பில்லை; வழக்கில்லை ! பிரதமர் நேரு—அப்பப்பா, எவ்வளவு மாறுபட்ட மனிதராயிருக்கிறார்.

தந்தையைக் கொள்கைக்காக எதிர்த்தவர், அதே கொள்கையின் அடிப்படையில் தன்னை யாராவது எதிர்த்தால் ஏசுகிறார் !

எகிப்தின் பிரச்சினைகள் அவருக்குப் புரிகிறது ; அக்கரை காட்டுகிறார். எழில் திராவிடத்தின் பிரச்சினையில் அக்கரை காட்டுவதில்லை; புரிந்து கொள்ள மறுக்கிறார் !

தொழிலாளர்களின் தோழனாக கராச்சியில் தீர்மானம் போட்டு முழங்கியவர், என். ஜி. ஓக்களுக்குப் பேட்டியளிக்க மறுக்கிறார்—ஆனால் எம். எஸ். உடன் அளவளாவ நேரம் கிடைக்கிறது !

கறுப்பு மார்க்கெட்காரர்களைச் தூக்கிலே போடாதது மட்டுமல்ல ; மறை முகமாக வக்காலத்து வாங்கிப் பேசுகிறார் !

முசோலினிக்குப் பேட்டியளிக்க மறுத்தவர், முசோலினியாகவே காட்சி யளிக்கிறார் !

விடுதலைப் படையின் முன்னணி வீரராக நின்று, இளைஞர்களின்லட்சிய புருஷராகவிளங்கியவர், விடுதலை இயக்கங்களை 'நான்சென்ஸ்' என்கிறார் ! விடுதலைப்போர் வீரர்களைக் 'காட்டுமிராண்டிகள்' என்று கண்டபடி ஏசுகிறார் ! நாக நாடு கேட்கும் நாகர்களைச் சுட்டுத் தள்ள பட்டாளத்தையே ஏவுகிறார் !

சுதந்திர வீரனாகத்தொடங்கி, பாசிச வெறியராக மாறியிருக்கிறார் நேரு.

ஏன் காங்கிரஸ் தோழரே, மௌனம் சாதிக்கிறீர் ? பேசுமய்யா, பேசும் ! கூறியதில் குறையிருந்தால் கூறும் ! தி. மு. க. வுக்கு என்ன அரசியல் தெரியும் என்கிறாரே உங்கள் மதி மிகு அமைச்சர், அவரிடம் கூறும், புள்ளி விவரங்களோடு சொல்லுகிறோம்.

ஜனநாயகம் பேசி வளர்ந்த கிராம்வெல் சர்வாதிகாரி யானான் !

ஹிட்லரும் அப்படியே !

நேரு...!!??

❊

அகில உலகப் புகழை மட்டும் வைத்துக்கொண்டு, நேரு கட்டும் பாரதம், மணல் மீது கட்டப்படும் மாளிகை ! சுழல் காற்றில் நிற்காது; சூறுவளியில் சிதைந்து விழுந்து விடும்.

நாம் கூறினால் கதருடைக் கனவான்கள் கோபிப்பர். லண்டனில் நடந்த சூயஸ் மகாநாட்டிலிருந்து திரும்பி வந்தவுடன், பம்பாயில் கிருஷ்ண மேனன் குறிப்பிட்டார் : "வெளிநாட்டில் அமைதியை நிலைநாட்டப் போராடும் பாரதத்தில், உள் நாட்டில் அமைதியில்லாதது வெட்கப்படத்தக்கது. வெளிநாட்டில் நம்முடைய கௌரவத்தைப் பெரிதும் குறைத்து விடும்." என்று. எவ்வளவு நிர்ப்பந்தம் ஏற்பட்டால், கிருஷ்ண மேனனே இந்த விஷயத்தைப் பகிரங்கமாகச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும். கிருஷ்ண மேனன் கூறியுள்ள வாசகத்தை ஆர அமர ஆழ்ந்து சிந்தித்தால் உட்பொருள் விளங்

❊ தொடர்ச்சி 8–ம் பக்கம்



22

சென்ற இதழில்...

[அழகப்பனும் நயினுவும் தங்களின் நட்பை பலப் ப்டுத்திக் கொண்டு, ஆனந்தியின் அறைக்குப் போகிருர்கள். அழகப்பன், ஆனந்தியைச் சகோதரியாகக் கருதத் துவங்குகிருன். சிந்தாமணியைப் பற்றிய நல்ல எண்ணத்தையும் நயினு அவன் மனதில் தூவுகிருன். புதிய மகிழ்ச்சியுடன் ஆனந்தியின் அறையில் நுழைந்த இருவரும் அங்கே ஆனந்தி கொலே செய்யப்பட்டிருப்பதைக் கண்டு திடுக்கிடுகிருர்கள். நயினுவுக்கு அழகப்பன்மீது சந்தேகம் பிறக்கிறது. அழகப்பனே அதிர்ச்சியடைகிருன். அப்போது போலீசாருடன் வேம்பு வருகிருன். போலீசாரிடம், அழகப்பன் தானே கொலே செய்ததாக ஒப்புகிருன். அதுபோல நயினுவும் தானே கொலே செய்ததாகக் கூறுகிருன். இறுதியில் இருவரும் கைது செய்யப்படுகிருர்கள். சிந்தாமணி, தன் வீட்டில் தன் தாயின் பிணத்தருகே நின்று, பழி வாங்கச் சென்ற தனக்கு முன்பாக யாரோ அந்த வேலேயைச்செய்து முடித்து விட்டார்கள் என்று வருந்துகிருள்...பிறகு.]

ஆவேசத்தின் எல்லேக் கோடு வரையிலே போய்விட்ட அவளது நெஞ்சத்தில் சிறிது சிறிதாக அமைதியின் சாயல் விழத் தொடங்கியது. ஆனுல் அந்த அமைதியிலே சோகத்தின் மயான நிலேமை ஒலித்துக் கொண்டிருக்கத் தவறவில்லே.

"பொழுது விடிந்தால்?" –இப்படியொரு கேள்வி அவள் இதயத்தின் துடிப்பை அதிகப் படுத்திற்று. தாயார் தற்கொலே ஊரெங்கும் பரவும். பஞ்சாயத்து, பிரேத விசாரணே என்றெல்லாம் வேதபுரத்து மக்கள் கூட்டம் கூடுவார்கள். அவர்களுக் கெதிரே நானும் நிற்க வேண்டும்; விபச்சாரி பட்டத்தோடு! அபின் கடத்தும்போது பிடிபட்டு ஜாமீனில் வந்திருக்கிருள் என்ற ஊரார் பேச்சைக் காதில் வாங்கிக் கொண்டு! அம்மம்மா! என்னுல் முடியாது!......வேதபுரத்தார் விழிகளிலே நான் படவே கூடாது!–என்று தனக்குத் தானே கதறிஞள். தானும், தன் தாயாரின் எதிரிலேயே உயிரை விட்டு பக்கத்திலேயே பிணமாகத் தொங்கலாம் என்றும் யோசிக்கத் தொடங்கிஞள். அப்போதும் அவள் மனக்கண் முன்னே ஊரார் தான் வந்துநின்றனர். தானும் தற்கொலே செய்து கொண்டால், நாளேக்கு வேதபுரம் என்ன பேசும்! — காலேயிலே வேதபுரம் மூன்று பிணங்களேக் காணும்' ஆனந்தி, சிவகாமி, சிந்தாமணி—மூன்று பிணங்களேப் பற்றியும் என்ன விமர்சனங்கள் வெளிவரும்?—

"அய்யோ; ஊருக்கு எவ்வளவோ உதவியாயிருந்தார்கள் அந்த உத்தமி ஆனந்தி! அந்த அம்மாவைக் கொன்று விட்டார்களே பாவிகள்!" என்ற விதத்தில் அனுதாபம் எழும்.

"சிவகாமி, பாவம்......எவ்வளவோ மனக்கோட்டையெல்லாம் கட்டிஞள்; அதுக்குள்ளே மண் கோட்டைக்குள்ளே போய் விட்டாள்!" என்று பரிதாபம் காட்டுவர்—அம்மாவின் பக்கத்திலே தன்னுடைய பிணமும் இருந்தால் இரண்டு பிணங்களேயுமே ஊரார் திரும்பிப்பார்க்காமல் போய்விட்டாலும் போய்விடுவார்கள்.

"சிறுக்கி! செய்வதெல்லாம் செய்துவிட்டு; கடைசியில் செத்துப் போய்ட்டாய்யா!" என்று கேலி புரிவர்—காரி உமிழ்வர்! ...... வேண்டாம்—வேண்டாம்— சாகவேண்டாம் என்ற தீர்மானமும் பலமாக எழுந்தது. தன்மீது சுமத்தப் பட்டுள்ள இரண்டு குற்றங்களிலுமிருந்தும் விடுபடவேண்டும். அபின் கடத்தியவள தானல்ல என்பது மட்டுமல்ல; அந்த உண்மையான குற்றவாளியும் அகப்பட்டாக வேண்டும். அது போலவே தான் களங்கமற்றவள என்று தேர்ந்து, அழகப்பன் தன்னேக் கல்யாணம் செய்து கொள்ள முன்வரவேண்டும். இந்த இரண்டு காரியங்களும் நடந்து, தான் அழுக்கற்றவள் என்று நிரூபிக்கப்பட்டுவிட்டால் மறுநாளே கூட செத்து விடலாம்; அது வரையில் உயிரை மாய்த்துக் கொள்வது கூடாது என்று உறுதி எடுத்துக் கொண்டாள். சரி! இப்போது எங்கே போவது? விடிந்து ஊரில் இருக்க முடியாதே! அவமானச் சின்னம் போல வேதபுரத்து வீதியிலே எப்படித் திரிவது?—என ஏங்கிஞள். அவளுக்குப் பால கங்காதரத்தேவரின் ஞாபகம் வந்தது. அவருடைய வீடு பக்கத்திலே ஐந்துமைல் உள்ள அய்யனூர் பண்ணேதான்—அங்கே போய்விட்டால் என்ன என்று ஆலோசனே செய்தாள். ஆனுல் அவர் பெங்களூரிலிருந்து நாளேக்குத்தானே வருவதாகச் சொன்னுர் என்ற சந்தேகமும் எழுந்தது! எதற்கும் அய்யனூர் பண்ணேக்குப் போய் விட்டால், அவர் வரும் வரையில் அங்கிருந்து, பிறகு அவரோடு பெங்களூர் சென்று, வழக்கு பற்றி ஒரு முடிவு செய்து, அவரிடமே அழகப்பனேப் பற்றியுங் கூறி, தன்னேக்களங்கமற்றவள் என்று அவனே நம்பச் செய்து விட வேண்டும் என்று மனக் கோட்டைகள் கட்டிஞள். தேவர்தான் தன்னேப் பண்ணேயிலேயே தங்கச் சொன்னுர் என்று கூறிஞல், அங்கு இடங் கொடுக்கமாட்டார்களா என்ன?—இப்படி யெல்லாம் அவளே கேள்விகளேக் கேட்டு பதிலேயும் கூறிக் கொண்டு வெகு விரைவில் அய்யனூர் பண்ணேக்குப் போய்ச் சேர்ந்து விட வேண்டுமென்ற முடிவுடன் எழுந்தாள். தன் தாயின் முகத்தைக் கடைசியாக ஒரு முறை தரிசனம் செய்து கொள்ள விரும்பிஞள். கால்களேக் கண்களில் ஒத்திக் கொண்டாள்.

"அம்மா! இதோ உன் மகள் இந்தக் கண்ணீரால் உன் கால்களேக் குளிப்பாட்டுகிருள். இருந்து குளிப்பாட்டி, உன் சவச் சடங்குகளேக் கூடச் செய்து முடிப்பதற்கான பாக்கியம் எனக்கு இல்லாமலே போய் விட்டது!......பரவாயில்லே!...உன் மகள் மீதுள்ள குற்றங்களும், மாசுகளும் அகன்று விட்டால் அதுவே உனக்கு நான் செய்யும் இறுதிக் கடமைகளேவிட அதிக மகிழ்ச்சி தரக்கூடிய சேதியாக இருக்கும் உனக்கு!...என்னேச் சுமந்து பெற்று வளர்த்தாய்! நானும் சுகம் காண வில்லே! நீயும் சுகம் காணவில்லே!

"பூவோடும், மஞ்சளோடும் போய் விடுவோமென்றுதானே தாயே; அப்பாவைப் பின் தொடர்ந்து விட்டாய்!... மானம் போனதே யென்று, அப்பா உயிர் நீத்தார்...கவலேப் படாதேயம்மா!...மானமுள்ள குடும்பந்தான் சிவநேசர் குடும்பம் என்பதை ஊர் அறியச் செய்கிறேன். வருகிறேன் அம்மா!...என்னேப் பெற்ற தாயே!...வருகிறேன்!"

சிந்தாமணி அந்த இருட்டில் வீட்டை விட்டுப் புறப்பட்டாள். அய்யனூரை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். ஐந்து மைல் தொலேவு!...விடிவதற்குள் போய் விடலாம் என்ற நம்பிக்கை அவளுக்குப் பூரணமாக இருந்தது. இரண்டு அல்லது மூன்று மைல் தூரம் போயிருப்பாள்; வழியில் யாரோ ஒருவன் அய்யனூர் நோக்கிப் போய்க் கொண்டிருந்தது தெரிந்தது. அவனது நடை நிதானமாயில்லே. தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்தான். இருட்டில் அவளுக்கு அவனேச் சரியாகத் தெரியவில்லே. அவன் குடிபோதையில் ஏதோ உளறிக் கொண்டு போகிருன் என்பதையும் அவள் புரிந்துகொண்டாள். அதனுல் அவனே உற்றுப் பார்க்கவே அவளுக்கு பயமாக இருந்தது. அவன் பக்கம் திரும்பாமலே வேகமாக அவனேக் கடந்து நடந்து கொண்டிருந்தாள்.

அவளேப் பார்த்துவிட்ட அவன், "ஏய் பொம்பளே! யாரது?...யார்?" என்று கத்திஞன், வாய் குழறியவாறு! சிந்தாமணி, இன்னும் வேகமாக—ஓட்டமும் நடையுமாக அய்யனூர் நோக்கிச் சென்றுள். அவன் வெகு தூரத்தில் அவளுக்குப் பின்னே போய்க்

கொண்டிருந்தான். அச்சமும், துக்கமும் ஆட்டிப் படைக்க சிந்தாமணி அய்யனூர் பண்ணைக்கு வந்து சேர்ந்தாள். பண்ணை வாசலிலே உள்ள அழகான வளைவுகளிலே நுழைந்து உள் வாயிற் பக்கம் வந்து சேர்ந்தாள். யாரோ வரும் அரவம் கேட்டு நாய் குரைத்தது'......''யாரது?'' என்ற ஒரு முரட்டுக் குரலும் அதைத் தொடர்ந்து கேட்டது. சிந்தாமணி பதில் சொல்லாமல் நின்றாள்.

''யார் இடும்பனா?'' என்றபடி காவற்காரன் அருகேவந்து, ''டார்ச்'' விளக்கை மேலே அடித்தான். ஒரு பெண் நிற்பதைப் பார்த்து காவற்காரன் திடுக்கிட்டான். ''யாரம்மா—என்ன வேணும்?'' என்றான் காவற்காரன். உடனே சிந்தாமணி......

''தேவர்...'' என்று இழுத்தாள்! அதற்குள் அவன், ''அய்யா இருக்காரே—பார்க்கணுமா?'' என்று கேட்டு விட்டான். அவளும் ''ஆமாம்'' என்று தலையசைத்து விட்டாள். காவற்காரன், ''இதோ வந்து விட்டேன்'' என்று சொல்லி உள்ளே போனான். இப்போது சிந்தாமணிக்கு வியப்பு ஏற்பட்டது—எப்படி தேவர், ஊரிலே இருக்க முடியும்–பெங்களூரிலிருந்து நாளைக்குத்தானே வருவதாகச் சொன்னார்—என்று தனக்குள்ளே பேசிக் கொண்டாள்.

அப்போது காவற்காரன் ஓடிவந்து, ''அம்மா! இதோ இந்த ஹாலில் உட்காரச் சொன்னார்—இப்போது வந்து விடுவார்!'' என்று கூறினான். சிந்தாமணியும் அவன் காட்டிய இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். காவற்காரன் வெளியே போய்விட்டான்.

சிந்தாமணி தேவரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ''சரக் சரக்'' என்ற செருப்பின் சப்தம் கேட்டது. ஒலி வந்த திக்கையே நோக்கியவாறு அவள் எழுந்து நின்றாள், தேவருக்கு மரியாதை அளிப்பதற்காக! ஹாலின் உட்பக்கக் கதவுப் புறம் போடப்பட்டிருந்த சிகப்புப் பட்டுத்திரை விலகிற்று.

அவர் வந்தார். சிந்தாமணிக்குத் தலை சுழன்றது. அவள் பெங்களூரில் பார்த்த பால கங்காதரத் தேவரல்ல அவர்! ''யாரம்மா?'' என்றார் தேவர்! சிந்தாமணி, நடுக்கத்துடன் ''மன்னிக்கவும்...நான்.. பால கங்காதரத் தேவரைப் பார்ப்பதற்காக......'' என்று திணறியவாறு கூறினாள்.

''நான்தான் பாலகங்காதரத் தேவர்...இந்த ஊரில் வேறு யாருமில்லை என் பெயர்கொண்டவர்களும்! என்னளவு பெருமையுடையவர்களும்!''

—என்று கம்பீரமாக மொழிந்தார் தேவர். ''அப்படியானால்

இந்த இதழ்

இந்த இதழ், அச்சியற்றுவதற்குத் தேவையானதும், போதுமானதுமான தாள் குறித்தநேரத்தில் கிடைக்காத காரணத்தால் மிகத் தாமதமாக வெளிவர நேரிட்டுவிட்டது. இனி, நமக்குத் தேவையான தாளை, நேரடியாகவே இறக்குமதி செய்துகொள்ள வசதிகள் ஏற்பட்டு விடுமாதலால், அடுத்த இதழிலிருந்து, குறித்த காலத்தில் 'முரசொலி' உங்களை நாடிவரும். இந்த இதழ் தாமதத்திற்குப் பெரிதும் பொறுத்தருள்க!

—ஆசிரியர்.

நான் பெங்களூரில் பார்த்த... பாலகங்காதரத் தேவர்?'' என்று கேட்டாள் சிந்தாமணி. தேவருக்கு ஒன்றும் புரியவில்லை. தன் பெயரைச்சொல்லி யாரோ ஒருவன் இவளை ஏமாற்றியிருக்கிறான் போலிருக்கிறது என்று எண்ணினார். ஆனால், அதிலும் தெளிவில்லை. அதில் தெளிவு ஏற்படாததற்குக் காரணமே; சிந்தாமணியின் தோற்றந்தான்! அவளைப் பார்த்ததுமே அவருக்கு போதை தலைக்கு மேலேறி விட்டது.

வேங்கையின் இருப்பிடத்திற்கே மான் விருந்தாக வந்தது போல் ஆகிவிட்டது சிந்தாமணியின் கதை! தேவரின் பார்வை அவளுக்கு அச்சத்தை மூட்டினாலும், புதிதாகத் தோன்றியிருக்கும் குழப்பத்தை எப்படியாவது தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று அவள் துடித்தாள். ''உன் பெயர் என்ன?'' என்றார் தேவர். சிந்தாமணி யென்று கேட்டு, இதழோரத்தில் புன்னகையை நெளிய விட்டார். ''அப்படியானால் பெங்களூரில் வந்த தேவர் யார்?...உண்மையான தேவர் நீங்கள்தானா?'' என்று மறுபடியும் ஆவலோடு கேட்டாள் சிந்தாமணி. ''நானேதான் பால கங்காதரத் தேவர் — அதில் சந்தேகமே வேண்டாம்!'' என்று கனைத்துக் கொண்டார் தேவர். அப்போது காவற்காரன் அவசரமாக ஓடிவந்து,

''எஜமான்!.....இடும்பன்...'' என்றான். உடனே தேவர் அவசரமாக எழுந்து,

''சிந்தாமணி, கொஞ்சம் இரு! இதோ வந்து விட்டேன்!'' என்று கூறிவிட்டு காவற்காரனுடன் வெளியே போனார். சிந்தாமணிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பெங்களூரில் தன்னை விடுவித்த பாலகங்காதரத் தேவர் யாராக இருக்கும்? —குழப்பிக் கொண்டாள்.

எழுந்து அந்த ஹாலிலேயே உலவினாள். அங்கிருந்தவாறு தோட்டத்துப் பக்கம் பார்த்தாள். தேவர் காவற்காரனுடன் அவசரமாக அந்தப் பக்கம் வந்தார். ஒரு கதவின் பக்கம் ஒளிந்து கொண்டு, என்ன நடக்கிறது என்று கவனித்தாள். அவள் வரும் வழியில் சந்தித்தாளே; அந்த மனிதனைத்தான் இருக்கவேண்டும்; ஒருவன் தள்ளாடியபடி தேவர் அருகே வந்தான்.

''எஜமான்! காரியத்தை முடிச்சுட்டேன்!'' என்று வாய் குழறியபடி சப்தம் போட்டான்.

''டே—இடும்பா! சப்தம் போடாதே!'' என்றார் தேவர்.

தியாகராயர் கல்லூரி கட்டிட நிதிக்காக

கலை விழா

சென்னை, வண்ணையம்பதி

தியாகராயர் கலாமண்டபத்தில்

நாள்தோறும் மாலை 6-மணிக்கு நடைபெறும்.

6-10-56	சனி	டி. கே. எஸ். சகோதரர்களின்
7-10-56	ஞாயிறு	''இராஜ ராஜ சோழன்''
8-10-56	திங்கள்	,, ''எது வாழ்வு?''
9-10-56	செவ்வாய்	என். எஸ். கிருஷ்ணன் குழுவினரின் ''தளபதி''
10-10-56	புதன்	சிவாஜி கணேசன் மன்றத்தின் ''விதி''
11-10-56	வியாழன்	எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினரின் ''மணி மகுடம்''
12-10-56	வெள்ளி	சாயி. சுப்புலட்சுமி—நடனம்
13-10-56	சனி	எம். ஜி. ராமச்சந்திரன் நாடக மன்றத்தின் ''அட்வகேட் அமரன்''
14-10-56	ஞாயிறு	அறிஞர் அண்ணா தலைமையில் 'இன்பக் கனவு'
15-10-56	திங்கள்	சூரிபாபு. இராஜேஸ்வரி குழுவினரின் ''தாரா சசாங்கம்'' (தெலுங்கு)

சீசன் டிக்கட்:— ரூ. 100, 50, 25, 15.

தினசரி: — ரூ. 5, 3, 2, 1, அணா 8.

சிந்தாமணிக்கு இடும்பன் யார் என்று விளங்கி விட்டது. வழியில் அவள் சந்தித்த ஆளாகத்தானிருக்க வேண்டும்; குரலும் அதுபோலத் தானிருக்கிறது என்று முடிவு கட்டிக் கொண்டாள். காவற்காரன், இடும்பன் மீது ''டார்ச்'' விளக்கை அடித்தான்! இடும்பன் ஆடை முழுவதும் ரத்தக் கறையாக இருந்தது. அவன் கையிலே ஒரு பள பளப்பான அரிவாளும் இருந்தது. அந்த அரிவாள் முழுதும் ரத்தத்தால் நனைந்திருந்தது. சிந்தாமணிக்கு மயக்கம் வந்துவிடும் போலிருந்தது. சமாளித்துக் கொண்டு கவனித்தாள். இடும்பனைப் பார்த்து தேவர் கேட்டார்—

''என்னடா, என்ன ஆச்சு? யாரும் உன்னைப் பார்க்கலியே?''

''இல்லிங்க எஜமான்! நான் மாடியிலேயே காத்திருந்தேன். யாரோ இரண்டு பசங்கள்; ஒருத்தன்தான் அந்த நயினா முகம்மது; இரண்டு பேரும் ரொம்ப நேரம் முழிச்சிகிட்டு, என்னென்னமோ ரகளை பண்ணினானுங்க! ஆனந்திக்கும் அந்தப் பசங்களுக்கும் வம்புச் சண்டை யெல்லாம் நடந்தது. அந்தச் சண்டையிலே அவள் மயக்கம் போட்டு விழுந்தா!... யாரும் பக்கத்திலே இல்லே!... நான் ஒரே போடு அவள் தலையிலே போட்டுட்டு வந்துட்டேன்......இன்னேரம்......அவ தீர்ந்திருப்பா எஜமான்!''...

சிந்தாமணிக்கு உடலெங்கும் வியர்த்துக் கொட்டியது. உதடுகள் உலர்ந்து விட்டன. எங்கேயோ ஒரு கொலைகாரன் கோட்டைக்குள் வந்து சிக்கிக் கொண்டோமே என்ற அதிர்ச்சி அவளைப் படாதபாடு படுத்தியது.

தேவர், இடும்பனைப் பார்த்து, ''சரி சரி!...வேட்டி, சட்டை, அரிவாள் எல்லாத்தையும் குழி வெட்டிப் போட்டு மூடுங்க... ம்...உடனே...பாக்கியெல்லாம் காலையிலே பேசிக்கலாம்!......'' என்று உத்திரவிட்டார். காவற்காரன் அந்தத் தோட்டத்து வேலி யோரத்திலே ஆழமான ஒரு குழி தோண்டினான். அதிலே அரிவாளும், ரத்தக் கரைபடிந்த இடும்பனின் உடைகளும் போட்டு மூடப்பட்டன.

இடும்பா!..........இன்னொரு மொந்தை குடிச்சிட்டு பேசாம போயி தூங்கு—போ! போ!!'' எனக்கூறி, தேவர், ஹால் பக்கம் வந்தார், சிந்தாமணியுடன் பேச வேண்டுமென்ற ஆசையோடு!...

(தொடரும்)

திருத்தம்

இந்த இதழ் 8-ம் பக்கம், முதல் காலத்தில், 11-வது வரியில் 'ட்ருமனின் தாய்' என்பதை 'ரூஸ்வெல்ட் ட்ருமனுக்கு முன்பு ஜனாதிபதியாய் இருந்தவர்' என்று திருத்திப் படிக்க வேண்டுகிறோம்.

ரூஸ்வெல்ட் கூற்று!

❊ 2-ம் பக்கத் தொடர்ச்சி

என்ன சொல்லப் போகிருர்கள்?

❊

சர் ·ஹெர்பர்ட் ரிஸ்லியின் 'ரிப்போர்ட்' இன்றைக்கு சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முந்தியது.

ஆனல் திருமதி எலினர் ரூஸ்வெல்ட் அம்மையார் (அமெரிக்க ஜனதிபதியாயிருந்த ரூஸ்வெல்ட்டின் மனைவி; ட்ருமனின் தாய்) சில மாதங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கும், இதர ஆசிய நாடுகளுக்கும் வந்திருந்தார். அந்த நேரம், தான் பார்வையிட்ட இடங்களைக் குறித்தும், அப்போது தோன்றிய எண்ணங்களை வைத்தும், "இந்தியாவும் விழித்தெழும் ஆசியாவும்" என்னும் புத்தகம் எழுதியுள்ளார். அதில் தென்னகத்தைப் பற்றி என்ன தெரியுமா குறிப்பிடப்பட்டிருக்கிறது?

"இந்த நாட்டின் (இந்தியாவின்) இதர பகுதிகளில் இருப்பவர்களைவிட தென் இந்தியாவில் வசிப்பவர்கள் அதிகக் கறுப்பாக இருக்கிருர்கள். நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கைபர் கணவாய் வழியாக வந்த ஆரியர்களது வருகைக்கு முன்பே இங்கு வாழ்ந்துவந்த திராவிடரின் வழி வந்தவர்கள் இவர்கள்."

(—பக்கம் 151)

—ஒரு அயல்நாட்டுக்காரருடைய கண்களுக்குக்கூட தென்னகத்தில் வாழ்வோர் திராவிடர் என்கிற தனி இனத்தைச் சார்ந்தவர்கள் என்று வெளிப்படையாகத் தெரிகிற அளவுக்கு பேதம் ஏற்பட்டிருக்கிறது.

மேலும் இந்த பேதமும், முறண்பாடுகளும் நாளுக்கு நாள் வளர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இனத்தால் மட்டுமல்ல; மொழியாலும் நாம் ஏக இந்திய ஐக்கியத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்கிருேம். 1911-ம் வருஷத்திய 'சென்சஸ் ரிப்போர்ட்டி'ன்படி இந்திய உபகண்டத்திலே மூன்று முக்கிய மொழிக் குடும்பங்கள் இருக்கின்றன.

(1) 23 மில்லியன் மக்கள் அல்லது 74·3 சத வீதத்தினர் இந்தோ—ஆரிய மொழிகளைப் பேசுகின்றனர்.

(2) 13 மில்லியன் மக்கள் அல்லது 4 சத வீதத்தினர் தீபெத் — சீன மொழிகளைப் பேசுகின்றனர்.

(3) 63 மில்லியன் அல்லது இருபது சத வீதத்தினர் திராவிட மொழிகளைப் பேசுகின்றனர்.

எப்படித் தென்னகத்திலே திராவிட மொழியானது திராவிட இனத்தை ஒன்று படுத்தும் சக்தியாகத் திகழ்கிறதோ அது போலவே வட நாட்டிலே நிலவும் இந்தி மொழி நம்மையும் வட நாட்டையும் பிரித்து வைக்கும் மொழியாக இருந்து வருகிறது.

1921-ம் ஆண்டு சென்சஸ் ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறபடி;

"ஒருவருக் கொருவர் அதிக மாற்றமில்லாமல் புரிந்து கொள்ளுகிறபடி வட இந்தியாவிலும், மத்திய இந்தியாவிலும் இருக்கின்ற மொழிகளில் ஒரு ஒற்றுமை காணப்படுகிறது."

ஆக, இதிலிருந்து இனத்தால் மட்டுமல்லாமல் மொழியாலும் கூட தெற்கிற்கும் வடக்கிற்கும் இடையே; பாலம் போட்டு இணைக்க முடியாத பிளவு ஏற்பட்டிருக்கிறது — என்பதை யாரும் மறுக்க முடியாது.

வேறு என்ன இருக்கிறது, இந்த உபகண்டத்தை ஐக்கியப் படுத்தி வைப்பதற்கு?

கலை, கலாச்சாரமா?

அதுவும் கிடையாது. திராவிடருடைய கலாச்சாரம் தனிப்பட்டது; வடநாட்டாருடையதைவிட மாறுபட்டது என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை:

பேராசிரியர் ஆசிர்வாதம் கூறுகிருர்:

"பழக்க வழக்கங்கள்; கலாச்சாரம்—ஆகியவற்றின் படி பார்த்தால்கூட இந்தியா பிரிந்துதான் காணப்படுகிறது!"

—இவ்வளவு முறண்பாடுகள் இருந்தும் தேசியத் திருவாளர்கள் ஏக இந்தியக் கூக்குரலை விடுவதாகத் தெரியவில்லை.

"வேற்றுமைகள் இவ்வளவு இருக்கின்றனவே?"—என்று கேட்கிருேம்; "இருந்தால் என்ன? வேற்றுமையில் ஒற்றுமை காணத் தெரியவில்லையே, உங்களுக்கு!"—என்று வெட்டி வேதாந்தம் பேசுகின்றனர்.

வேற்றுமையில் ஒற்றுமையாம்! — கூறுகிருர்கள்; வேம்பை நாவிலே தடவிவிட்டு, பார்த்தீர்களா? கசப்பிலே இனிப்பு—என்று ஊளையிடுவதைப்போல!

வேற்றுமையில் ஒற்றுமை—என்னும் இந்த வறட்டு வேதாந்தம் இன்று மட்டுமல்ல; பல ஆண்டுகளுக்கு முன்பே பலராலும் கேலி செய்யப்பட்டிருக்கிறது.

1939-ம் ஆண்டு டிசம்பர் மாதம் காங்கிரசின் கொள்கைகளை விமர்சனம் செய்த சவர்க்கார் இவ்வாறு கூறினர்:

("ஒரு பூகோளப் பிராந்தியம் ஒரு தேசிய இனத்தைச்சார்ந்தது — என்னும்) இந்தக் கொள்கை ஐரோப்பாவிலேயே அழிவைக் கண்டிருக்கிறது ...... ஒற்றுமைப் படுத்துவதற்கு வேறெந்தச் சக்தியுமில்லாமல் வெறும் பூகோள அமைப்பைக் கொண்டுமட்டுமே நாடுகளை உண்டாக்குவது என்பது நாளடைவில் அழிந்துவிடும். கலாச்சாரம்; மொழி; சரித்திரம்—போன்ற தொடர்புகள்தான் வெறும் பூகோளத் தொடர்பைவிட பலம் வாய்ந்தவை—என நிரூபிக்கப்பட்டிருக்கிறது."

—ஆனல் காங்கிரஸ் சவர்க்காருடைய இந்த விமர்சனத்துக்கு மதிப்பு வைக்கவில்லை. ஒரு பூகோளப் பிராந்தியத்தில் வசிப்பவர்கள் அனைவரும் ஒரு தேசிய இனம்; அதன்படி இந்தியா என்னும் பூகோளப் பிராந்தியத்தில் வாழும் அனைவரும் இந்தியர்கள் — என்று கருதிக் கொண்டு அவர்கள் இந்தியா பூராவையும் ஒரு நாடாக்கினர். அதைத் தவறு என்று நிரூபிக்கும் செயல்தான் இன்று தென்னகத்திலே எழுந்திருக்கும் திராவிடநாட்டு விடுதலைக் கிளர்ச்சியாகும்.

மேலும் காங்கிரஸ் செய்த இன்னொரு தவறு பாகிஸ்தான் தவிர்த்த இந்தியாவில் வசிக்கும் அத்தனை இந்துக்களும் ஒரே வகையினர் என்று முடிவு செய்ததும் ஆகும்!

இங்கு இந்து மதம் ஒரு 'ஒன்று படுத்தும் சக்தி'யென்று சிலர் கூறுகின்றனர்.

அதுவும் தவறு. பேராசிரியர் ஆல்பிரட் கோபன் கூறுகிறபடி:

"வங்காளிகள்; ராஜபுத்திரர்கள்; மதராசிகள்: மராத்திகள் போன்ற இந்துக்களி

❊ தொடர்ச்சி 10-ம் பக்கம்

பொழுது போக்கு

❊ 5-ம் பக்கத் தொடர்ச்சி

கும். காங்கிரஸ் அன்பர்கள் சிந்திப்பார்களாக!

* * *

"அறிவுள்ளவன் பேசவேண்டும்; புத்தியுள்ளவன் கேட்க வேண்டும்!" என்பது பழமொழி. ஆனல் காங்கிரஸ் ஆட்சியில் புத்தி இல்லாதவன் பேசுகிருன்; ஆணையிடுகிருன்; அறிவுள்ளவன் கேட்டு நடக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிருன்.

நவீன காலத்தில் நாட்டை ஆளவரும் அரசியல் வாதிக்கு அவசியம் பொருளாதாரம் தெரிந்திருக்க வேண்டும். பொருளாதார நிபுணர்களுக்குக் காங்கிரசில் எப்போதுமே பஞ்சம்.

ஆர். கே. ஷண்முகம்,
ஜான் மத்தாய்,
தேஷ்முக்,

—இந்த நிதி யமைச்சர்கள் யாருமே காங்கிரஸ்காரரல்ல!

பொருளாதாரத்தின் திக்கே தெரியாத காங்கிரஸ் மந்திரிகள் கொண்டுவரும் பொருளியல் சீர்திருத்தம் எல்லாம் நீண்ட காலப் பலாபலன்களை சிந்தித்திருப்பதாகவே தெரியவில்லை. உண்மையான நிலச் சீர்திருத்தம் மிட்டா, மிராசுகளை விட்டிருக்கக்கூடாது. அதிகப்படியாக ஒருவர் இவ்வளவு நிலம் தான் வைத்திருக்கலாம் என்று வரையறை செய்திருக்க வேண்டும். அல்லது நிலத்தின் மேற்பார்வை உரிமையை அரசாங்கம் எடுத்துக்கொண்டு, கூட்டுறவுப் பண்ணை முறையை அமுல் செய்திருக்க வேண்டும். உண்மைச் சீர்திருத்தத்தில் நாட்டம் இருந்தால்தானே? எல்லாம் 'எலக்ஷன் ஸ்டண்ட்'!

❊

நிலச் சீர்த்திருத்தம் தேவையானுலும்; விவசாயப் பொருளாதாரத்திலிருந்து தொழிலியல் பொருளாதாரத்துக்கு ஐந்தாண்டுத் திட்டங்களால் கொண்டு செல்லப்படும் நாட்டில், முதலில் தொழிற்சாலைகள் நாட்டுடமையாக்கப்பட்டிருக்க வேண்டும். தொழிலதிபர்களிடம் கைவைக்க அரசாங்கத்துக்கு அச்சம்! அதோடு, தொழிற்சாலைகளைத் திறம்பட நடத்த அரசாங்கத்திற்குத் திறமையிருக்காது என்பது ஆளும் கட்சியின் அனுபவ அறிவாக இருக்கலாம்!

❊

ராஜஸ்தான் பிரதமர் சினிமாத் தொழிலை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்கிருர். இப்பொழுதாவது சினிமாவின் மூலமாக அரசாங்கத்துக்கு ஆண்டுக்கு 12 கோடி ரூபாய் வருமானம் கிடைத்து வருகிறது. சர்க்கார் சினிமாப் படம் எடுத்தால், மக்கள் கட்டாயம் வந்து பார்க்க வேண்டுமென்ற சட்டமும் தேவைப்படும்!

செக்கோஸ்லோவேக்கியாவில் அரசாங்கமே சினிமாத் தொழிலை நடத்துகிறது. ஊர்திகளின் மூலமாக இழுத்துச் செல்லப்படும் சினிமாக் கொட்டகைகளில், ஆண்டொன்றுக்கு 60,000 இடங்களில் 1,20,000 காட்சிகள் காட்டுகின்றனர். இவையன்றி நகரங்களில் நிரந்தரக் கொட்டகைகளும் உண்டு. வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் படமாக்குகிருர்கள். சினிமா அங்கு நல்லறிவு பரப்பும் சாதனமாக விளங்குகிறது.

ஆனல் இங்கோ...சினிமா சிறப்படைய வேண்டும் என்று சொல்லுங்கள், 'புரட்சிக்காரர்கள்',-பலசரக்கு மூட்டையை அவிழ்த்து விட்டு விடுவார்கள்.

பழிச்சொல்!

தாமரைக் குளம் புகை வண்டி நிலையத்தை நான் அடைந்தபோது மாலை மணி மூன்று. கோவை செல்லும் வண்டி வருவதற்கு இன்னும் இரண்டுமணி, பத்து நிமிடம் இருக்கிறது. இந்த நேரத்தை எப்படிக் கழிப்பது என்ற சிந்தனை எனதுள்ளத்தில் வேர் விட்டது.

அருகிலிருந்த பெட்டிக் கடையில் சிகரெட் ஒன்று வாங்கி, புகைத்துக்கொண்டே ஸ்டேஷனில் பிரயாணிகள் தங்கும் ஆசனம் ஒன்றில் வந்து உட்கார்ந்தேன். நீண்ட நேரம் ஆனதுபோல எனக்குத் தோன்றினாலுங்கூட கையிலிருந்த கடிகாரம் என்னவோ பத்து நிமிடங்கள்தான் ஆகிறது என்று கூறியது! இன்னும் இரண்டு மணியைக் கழித்தாகவேண்டும்!

சற்று நேரத்துக்கெல்லாம் கையில் சாட்டையுடன் வயது சென்ற கிழவர் ஒருவர் என்னருகில் வந்து அமர்ந்தார். நாகரிகமற்ற நாட்டுப்புறத்தவர் அவர். உழைத்துழைத்து மெலிந்துபோன அவரது உடலில் காலம் தன் கை வண்ணத்தைக் காட்டியிருந்தது! சாவதானமாக அவர் தனது மடியை அவிழ்த்து வெற்றிலைப்பாக்கு போட ஆரம்பித்தார். ஐம்பது வயதைத் தாண்டிவிட்ட அந்தப் பெரியவரையும், அவரது நடவடிக்கைகளையும் பார்க்கும் போது எனக்கு வியப்பாகவே இருந்தது.

"ஏன் பெரியவரே; நீங்க யாரு?" என்ற கேள்வியைப் போட்டேன், அவருடனாவது சற்று நேரம் பேசி நேரத்தைப் போக்குவோமே என்ற எண்ணத்தில்!

"வண்டிக்கார வரதப்பன் என்றால், தெரியாதவங்க இந்த கிராமத்திலே இல்லீங்க, அந்த நாளிலே! இந்த ஸ்டேஷனிலே இறங்கிற எல்லோருமே இந்த வரதப்பன் வண்டியைத் தவிர வேறு வண்டியிலே ஏறவே மாட்டாங்க...ம்!...இப்ப எல்லாம் யாரு இந்தக் கிழவனை நாடுறா?"—அவரது குரலிலே ஏக்கம் இழைந்து ஒலித்தது! நான் ஒன்றும் சொல்லவில்லை. சற்று அமைதி நிலவியது.

அந்த அமைதியைக் கலைத்தது, எங்கோ தூரத்தில் கேட்ட அழுகைக் குரல். அது வரவர எங்களை சமீபித்து வந்தது. நானும் பெரியவரும் எழுந்து சென்று பார்த்தோம். அது ஒரு பிண ஊர்வலம். பத்துப் பதினைந்து பேரே உடன் சென்றனர். ஆனால் ஒரே ஒரு இளைஞன் மட்டுமே அழுது கதறிக் கொண்டு சென்றான். மற்றவர்கள் அதுபற்றி ஏதும் கவலைப் பட்டவர்களாகத் தெரியவில்லை.

ஊர்வலம் புகை வண்டி நிலையத்தைத் தாண்டிச் சென்று விட்டது. நானும் பெரியவரும் வந்து முன்போலவே அவரவர் இடங்களில் அமர்ந்து கொண்டோம்.

"ஏன் பெரியவரே; யார் இந்தப் பிணம்? எல்லோரும் அழாமல், அவர்களில் ஒரு இளைஞன் மட்டும் அழுதுகொண்டு செல்கிறானே ஏன்?"—என்றேன், எனது சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளவேண்டும் என்ற ஆவலினால்.

"அது பெரிய கதைங்க அநியாயமாக இந்த மூட்டாள் உலகம் தனது பழிச்சொல்லால் ஒரு பெண்ணைக் கொன்று விட்டது. அவளுடைய பிணம்தான் அது. பின்னால் அழுதுகொண்டு போகிறானே அவன் அப் பெண்ணின் கணவன்."

"பெண் ஏன் இறந்தாள்? விளக்கமாகக் கூறுங்கள் பெரியவரே!" என்றேன். புகையிலைத் துண்டு ஒன்றை எடுத்து வாயில் திணித்தபடியே "சொல்கிறேன்; கேள் தம்பி" என்றவாறு கதையைத் தொடங்கினார் வண்டிக்கார வரதப்பன்!

❋

பெரிய பண்ணை ஆனந்தம் என்றால் சுற்றுவட்டாரத்திலே தெரியாதவர்கள் கிடையாது. அவரது ஒரே மகள்தான் சுந்தரி. கார் நிறக் கூந்தலும் கண்டோர் வியக்கும் தோற்றமும் படைத்தவள்; எழில் மங்கை. அவளது காதலைப் பெறக் காத்துக் கிடந்த காளையர் தொகை ஏராளம். என்றாலும் எவரையுமே நெருங்க விடாத பெரு நெருப்பாக இருந்தாள் அந்தக் கிராமத்துக் குமரி.

இந்த நிலையிலேதான் நடராசன் என்ற நல்லபாம்பு ஒன்று அவளது வீட்டிலே வேலையாளாகச் சேர்ந்தது. சேர்ந்த சில நாளிலேயே எழில் மலர் சுந்தரியை கசக்கி முகரத் திட்ட மிட்டு விட்டான் அந்தக் கயவன். சூது உணராத அந்தச் சுந்தரியோ, சூழ்ச்சி வலை விரிக்கப்பட்டிருப்பதை அறியவில்லை.

ஒருநாள்...அந்த நச்சுப்பாம்பு அவளைத் தீண்டி விட்டது. துடித்தாள்; துவண்டாள். வெறியனின் கையிலே சிக்கிய சுந்தரி வேதனை தாளாது அழுதாள். வேறென்ன செய்ய முடியும் அந்தப் பூங்கொடியால்? நச்சுக் குணம் கொண்டவனோ, இச்சை நிறைவேறியபின் இந்த ஊரை விட்டே ஓடிவிட்டான்!

"உலகம் இருக்கிறதே, அது மிகமிகப் பொல்லாதது. மனித குலத்துக் கென்று அது வகுத்துள்ள நீதிப் பாதையிலிருந்து ஒரு சிறிது விலகினாலுங்கூட உலகம் தூற்றத் தொடங்கி விடுகிறது. அதிலும் பெண்கள் என்றால் அதற்கு சொல்ல வேண்டியதேயில்லை!"

"விபச்சாரி; கற்பிழந்தவள்"—ஊரும் உலகமும் சுந்தரியைத் தூற்றியது சுந்தரியும் அவள் பெற்றோரும் வேதனைச்சித்திரங்களாக மாறிவிட்டனர். தனது கற்பு சூரையாடப்பட்டு விட்டது சூதுக்காரன் ஒருவனால் என்பதை நினைக்குந்தோறும் சுந்தரியின் வேல் விழியில் வெள்ளம் பெருக ஆரம்பித்து விடும்!

மாதங்கள் பல மறைந்தொழிந்தன. சுந்தரியைப் பெண் கேட்க எவருமே முன்வரவில்லை; வந்த சிலரையும் ஊராரின் பேச்சு விரட்டியடித்துவிட்டது. இந்த நிலையிலேதான் சந்திரன் இவ்வூர் பள்ளித் தலைமை ஆசிரியனாக மாற்றலாகி வந்தான்.

சந்திரன்!

பெயரைக் கேட்கும்போதே ஒரு இனிமை தட்டுகிறது அல்லவா? ஆம்! இனிமையான பேச்சும், எதையும் சிந்தித்துப் பார்க்கும் அருங்குண நோக்கும் கொண்ட இலட்சிய இளைஞன் தான் சந்திரன். எளிய தோற்றமும் எவரையும் வசீகரிக்கும் தன்மையும் கொண்டவன் என்பதினாலோ என்னவோ; ஊரார் அனைவரும் அவனிடம் மரியாதையுடன் பழகினர்.

ஆற்றங்கரையில் ஒருநாள் அவன் சுந்தரியைக் கண்டான். நாகரிகத்தின் காலடிச் சுவடு படாத இந்தக் குக்கிராமத்தில், இப்படிப்பட்ட பேரழகுள்ள பெண்ணொருத்தி இருப்பாள் என்று எண்ணிக்கூடப் பார்த்ததில்லை! அதே நினைவில் ஆழ்ந்திருந்த அவனால் அன்றிரவு சரியாக உறங்கக்கூட முடியவில்லை.

யார் அந்தச் சுந்தரி என அண்டை அயலில் விசாரித்தான். அவள் கெட்டுப்போனவள் என்றும் அதனால் எவரும் திருமணம் செய்து கொள்ள முன்வரவில்லை என்றும் கூறினர். அந்த அழகுச் சிலையின் நிலையை எண்ணி வேதனையடைந்தான்.

நாட்கள் பிறந்து செத்துக் கொண்டிருந்தன. ஆனால் அவனது எண்ணங்கள் சாகவில்லை. அந்த எண்ணத்தின் முதிர்ச்சியிலே சந்திரனின் இதயத்தில் ஓர் புதிய நினைவு முளைத்தது. "ஏன் சுந்தரியை நாமே மணந்து கொண்டு, அவளுக்கு புது வாழ்வு அளித்தால்......?"—ஒரு மாபெரும் காரியத்தைச் சாதித்து விட்ட வெற்றி வீரனைப் போல ஆனந்தத்தினுடைய வீடுநோக்கி நடந்தான்.

சந்திரனது எண்ணத்தை அறிந்த ஆனந்தம் அசந்து விட்டார் வியப்பால். அவரால்

❋ தொடர்ச்சி 4-ம் பக்கம்

சங்கரலிங்கம்-அண்ணா சந்திப்பு.

★

30—8—56 ஞாயிறன்று தூத்துக்குடியிலிருந்து திரும்பும் வழியில் இரவு 1-மணியளவில், விருதுநகரில் பல நாட்களாக சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயரிடக்கோரி உண்ணாவிரதம் இருந்து வரும் காங்கிரஸ் அன்பர் தோழர் சங்கரலிங்கம் (நாடார்) அவர்களை அண்ணா அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தோழர் எஸ். முத்து ஆகியோர் சந்தித்து உரையாடினர்.

அண்ணா அவர்களைக் கண்ட தோழர் சங்கரலிக்கம் அண்ணா அவர்களின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டார்.

காங்கிரஸ்காரர்களின் கையாலாகாத் தன்மையையும், காக்கிரஸ் சர்க்கார் காந்தியாரின் கொள்கைக்குச் செய்துவரும் கொள்கைத் துரோகத்தையும் சொல்லி அவர் மனம் புழுங்கினார்.

அண்ணா அவர்களும் அவர் சார்ந்திருக்கும் தி. மு. கழகமும், தமிழுக்கும், தமிழகத்திற்கும் ஆற்றிவரும் தொண்டினை மிக மிகப் பாராட்டிப் புகழ்ந்தார்.

இடி விழுந்தது 'ஏக பாரத'த்தில்!

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

ளிடையே கூட பலமான முரண்பாடுகள் காணப்படுகின்றன.''

அதனுல்தான் டாக்டர் அம்பேத்கார் :

''இந்து மாநிலங்களில் கூட, அவர்களை இணைத்து வைப்பதற்கான பொதுப் பழக்க வழக்கங்களும், உணர்ச்சியும் கிடையாது.''

—எனத் தெள்ளத் தெளியக் கூறியிருக்கிருர்.

எனவே—
இனத்தால்;
மொழியால்;
கலாச்சாரத்தால்;
மதத்தால்;

—இந்திய உபகண்டத்திலே வாழ்வோர் ஒன்று பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

—அப்படியிருந்தும்,
ஏக இந்தியா
ஐக்கிய இந்தியா

—கூக்குரல் அழிந்து விட்டதா? இல்லை.

பல இனங்கள்
பல மொழிகள்
பல கலாச்சாரங்கள்

—இவைகளையெல்லாம் ஒன்று சேர்த்து; பொடியாக்கி; பிசைந்து; ஏக இந்தியப் பணியாரம் சுட முயல்கின்றனர், பாரத புத்திரர்கள்!

இந்தியா ஒரு நாடல்ல என்னும் கொள்கையை அழுத்தந் திருத்தமாக உறுதிப்படுத்திக் கூறுகிறவர்கள் நாம் மட்டுமல்ல: பன்னெடுங்காலமாகவே பல அறிஞர்கள் இது குறித்து தங்கள் எண்ணங்களை வெளியிட்டிருக்கிருர்கள்.

1942-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ம் தேதியன்று அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்திலே சர் பெரோஷ்கா நூன் பேருரையாற்றிஞர்.

அப்போது அவர் சொன்ன கருத்துக்கள் சில கவனிக்கத் தக்கன.

இந்த உப கண்டத்திலிருக்கும் ஒவ்வொரு மாகாணங்களுக்கும் சுயாட்சி கொடுத்து விட வேண்டும். அதாவது பிரிட்டிஷாரின் ஆட்சியில் எப்படி டொமினியன் அந்தஸ்து பெற்ற நாடுகள் சுதந்திரமாக வாழ்கின்றனவோ அந்த அளவு சுதந்திரம் மாகாணங்களுக்குத் தரப்பட வேண்டும்.

பாதுகாப்பு, சுங்க இலாக்கா, நாணயச் செலாவணி வெளிநாட்டு உறவு-இவை மட்டுமே மத்திய அரசாங்கத்திடம் இருக்க வேண்டும்.

—இந்த அளவு மாகாணங்களுக்குச் சுதந்திரம் வழங்கிஞல்தான் மேற் கொண்டு பிளவைத் தடுக்க முடியுமென்று கூறிஞர், அவர்!

இப்போது பார்க்கப் போஞல் சர் பெரோஷ்கா நூன் சொன்ன வார்த்தைகள் அனைத்தும் உண்மையாகிவிடும் போலிருக்கிறது.

எப்படி டொமினியன் அந்தஸ்து பெற்ற நாடுகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் வாழ்கின்றனவோ அப்படியே மாகாணங்கள் பூரண உரிமை பெற்று; இந்திய மத்திய அரசாங்கத்தின் கீழ் இருக்க வேண்டும் — இதுதான் சர் நூன் உடைய கருத்து.

இப்படி ஒரு தற்காப்பு ஏற்பாடுதனைச் செய்து வைத்தால் இந்தியா மேலும் மேலும் ஏற்படவிருக்கும் பிரிவினையைத் தடுத்து நிறுத்தலாம் — இதுதான் அவருடைய நல்லெண்ணமாக இருந்திருக்க வேண்டும்!

நூன் விரும்பியது மாநிலங்களது உள்நாட்டு விஷயங்களில் தலையிடாத மத்திய அரசாங்கத்தை! அதன் மூலம் அடிமைப்படுத்தப் படாத-சுரண்டுவதற்கு சிறிதும் இடந்தராத, மாநில அரசாங்கத்தை!

—ஆஞல் இதுபோன்ற நல்ல கருத்துக்கள் தேசியத் திருவாளர்களால் ஏற்றுக் கொள்ளப் படவில்லை.

சர். நூன் கருத்தை இங்கு ஏன் குறிப்பிட்டோமென்ருல், டொமினியன் அந்தஸ்து அளவுக்குச் சுதந்திரம் கொடுத்துத் தீர வேண்டிய நிலைமையில் இங்கே மாநிலங்கள் பேதம் கொண்டதாய் — ஒன்ருகப் பிணைத்து வைக்கமுடியாதனவையாய்-அமைந்திருக்கின்றன —என்பதை விளக்குவதற்குத் தான்!

இவ்வளவு பேதங்களையும் வைத்துக்கொண்டு பெருந் தலைவர்கள் அனைவரும் ஐக்கிய பாரதப் பெருங்கூச்சல் எழுப்புவது சிலருக்கு வேடிக்கையாகத் தெரியலாம்.

வேடிக்கையல்ல, நண்பர்களே; வேடிக்கை யல்ல!

நம்மை அடிமைப் படுத்தி வைக்க நினைக்கும் சூதுத்திட்டம் தான், அது!

1859-ம் வருஷத்திலே பம்பாய் கவர்னராயிருந்த எல்பின்ஸ்டன் பிரபு தன்னுடைய மினிட்' புத்தகத்திலே:

''பிரித்து ஆளு—இதுதான் ரோமானியர்களது குறிக்கோளாக இருந்தது. அதுதான் நம்முடைய (வெள்ளையர்களுடைய) குறிக்கோளாகவும் இருக்க வேண்டும்.'' என்று எழுதியிருந்தார்.

பிரித்து ஆளு—இது வெள்ளையர் ஆட்சியின் அச்சாணிக் கொள்கை!

இதேபோலவே மொராதாபாத்தின் இராணுவத்துக்குத் தலைமை யேற்றிருந்த லெப்டினன்ட் கர்னல் கோக் என்பார் ஆங்கிலேயரது அரசியற் கொள்கை பற்றி கீழ்க் கண்டவாறு கூறிஞர்:

''இங்கு பல மதங்களிடையே; இனங்களிடையே நிலவிவரும் வித்தியாசங்களைக் குறைக்காமல் அதிகப்படுத்துவதுதான் நம்முடைய முயற்சியாக இருக்க வேண்டும். பிரித்து ஆளு; —இதுவே இந்திய அரசாங்கத்தின் இலட்சியமாக இருக்க வேண்டும்.''

—சுருங்கச் சொன்ஞல் இதுவரை வெள்ளையர்கள் இங்குள்ள வெவ்வேறு இனங்களைப் பிரித்து, தங்களது ஏகாதிபத்யச் சுரண்டலை ஸ்திரப்படுத்திக் கொண்டு வாழ்ந்தனர்.

இப்போதோ அதில் சிறிது மாற்றம்!

பிரித்து ஆண்டனர்—வெள்ளையர்!

சேர்த்து ஆள முயல்கின்றனர், வடநாட்டுக் கொள்ளையர்!

கொண்டிருக்கும் கொள்கையிலே தான் வித்தியாசமேயன்றி, நோக்கம் ஒன்றுதான் —சுரண்டுவதுதான்!

—இந்த சூழ்ச்சித் திறனை அறியாதவர்கள் ஒன்று பசும்பாலுக்கும், கள்ளிப்பாலுக்கும் வித்தியாசம் தெரியாத குழந்தைகளாக இருக்கவேண்டும்; அல்லது அன்ெருரு நாள் தென்னிலங்கை வேந்தன்—திண்தோள் வீரன் —இராவணனுக்குத் தம்பியாகப் பிறந்து, பெரும் பழி தேடிவைத்த விபீஷணன் வர்க்கமாக இருக்கவேண்டும்!

பிரித்தாளும் சூழ்ச்சி தகர்த்தெறியப்பட்டது, கால வெள்ளத்தால்!

—ஒற்று சேர்த்து ஆளப்பார்க்கும் சூழ்ச்சியும் அப்படித்தான்; இன்றில்லா விட்டால் நாளை தவிடுபொடி செய்யப்பட்டே தீரும்!

—மாறன், எம். ஏ.

கொள்கை வளருது கோபுரம் போலே!

சேலம் (கல்லாங்குத்து)

7—10—56 மாலை 6 மணிக்கு நடைபெறும் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் டி. கே. சீனிவாசன், சிற்றுளி சுப்பிரமணியம் — ஆகியோர் பேசுவர்.

திருமணம்

7—10—56 ஞாயிறு காலை 8-30 மணிக்கு, சென்னை, தங்கசாலைத் தெரு, 330-ம் எண்ணுள்ள திருமண மண்டபத்தில், தோழர் எம். எஸ். கஜேந்திரனுக்கும், தோழியர் ராணி அம்மையாருக்கும் தோழியர் டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். தோழர்கள் மு. கருணநிதி, ஏ. எஸ். வேணு, ஆடலழகன் — ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

வெள்ளாங்கோயில்

5—10—56 வெள்ளி மாலை 6 மணிக்கு. தோழர் இரா. துரை அவர்கள் தலைமையில், தோழர்கள், ஈ. வெ. கி. சம்பத், கா. அன்பரசு ஆகியோர் பேசுவர்.

வடார்நாடு மாவட்டத்தில் தி. மு. கழக தேர்தல் ஆய்வுக் குழு

வடாற்காடு மாவட்டத்தில் கீழ்க்கண்ட விபரப்படி தேர்தல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெறும்:

12—10—56 மாலை 6 மணிக்கு, வேலூர் டவுன் ஹாலிலும்;

13—10—56 காலை 10 மணிக்கு, திருப்பத்தூர், சின்னக் கடைத் தெரு, 58-எண்ணுள்ள இல்லத்திலும் நடைபெறும்.

கிளைக் கழகச் செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும், கழக ஆர்வம் கொண்ட பிரமுகர்களும், ஏதாவது ஒரு கூட்டத்திற்கு வந்திருந்து தங்களது கருத்துக்களை தெரிவிக்க வேண்டுகிறேன்-என்று வடாற்காடு மாவட்ட செயலாளர் தோழர் முல்லைசத்தி அவர்கள் தெரிவிக்கிருர்.

"வெள்ளி வீதி"
விற்பனையாகிறது.
பத்மினி பேட்டி
திரை உலகைப் பற்றி ராஜ்கபூர்
தென்னக சினிமா உலகம் முன்னேற—
டைரக்டர் எச். எம். ரெட்டியின் கருத்துரை
'வாழ்விலோர் நாள்';
தாய்க்குப்பின் தாரம்—விமர்சனங்கள்
ஐமுனுவின் வாழ்க்கைக் குறிப்பு
—இன்னும் பல பகுதிகள்
20 பக்கங்கள் விலை 2 அணு

★ விலங்கு ★

மாலை நேரம், அது!

அமைதியாக தன் வீட்டு வாசலில் அமர்ந்திருந்த செல்வி, அடிவானத்தை விவரிக்க முடியாத ஒரு வேதனை உணர்வுடன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. வாழ்வுக் களத்தில் பல பிரச்சினைகளை எதிர்த்து, அழிக்க வேண்டிய நிலையில் உள்ள பெரியவர்களது கண்களில்கூட அவ்வளவு கவலை தென்படுமா என்பது சந்தேகம்தான்!

அந்த அளவுக்கு, விளையாட்டுப் பருவத்தில் அகற்றற்ற வேதனைதான் என்ன? அதன் சிறிய சிவந்த உதடுகள் மட்டும் அடிக்கடி 'வளையல், வளையல்' என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தன. அதென்ன வளையல்? ஆமாம்; வளையல் ஆசைதான் அந்த வம்புப் பெண்ணை வாட்டத்தின் உருவாக ஆக்கி விட்டிருந்தது. அடுத்த வீட்டு 'முல்லை' கல் வைத்த வளையல்கள் இரண்டு புதிதாக வாங்கிப் போட்டிருந்தது. செல்வியின் நெஞ்சையும் அந்த பளபளப்பான வளையல்கள் கவர்ந்துவிட்டன. தனக்கும் அதுபோல வேண்டுமென்று தன் அன்னையிடம் கூறியது செல்வி! ஆனால் அம்மாவோ, "அடியம்மா! உன் அப்பாவின் வருமானம் அதற்கெல்லாம் இடம் கொடுக்காது, தாயே!" என்று கூறிவிட்டார்கள். எனவே தன் விருப்பம் நிறைவேறுவதற்கு வழி ஏதும் தோன்றாத செல்வி, வாட்டமுடன் இருந்தது.

முத்து விளையாடக் கூப்பிட்ட போதுகூட "ஊஹூம்...நான் வரலே, நீ போ அண்ணா!" என்று சொல்லிவிட்டது.

மாலையும் மெல்ல நகர்ந்தது. ஆனால் செல்வியோ இடத்தை விட்டு நகரவே இல்லை. சிலை போல் அமர்ந்திருந்த அந்தச் சிறுமியின் ஏக்க விழிகளிலே கண்ணீர் ததும்பி நின்றது.

அப்போது தெருக் கோடியில் விளையாடிக் கொண்டிருந்த முத்துவை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்த தந்தை செல்வியின் அந்தக் கோலத்தைப் பார்த்ததும் பதறிவிட்டார். "ஏன் செல்வி, ஏன் இப்படி?" என்று வியப்புடன் கேட்டார். செல்வி பதில் ஏதும் கூறவில்லை. மௌனமாகத் தலையைக் குனிந்து கொண்டது.

முத்துவும் கேட்டான், "ஏன் செல்வி, அழுவுறே?" என்று. தான் விளையாட அழைத்துப் போகாமல், தனியே விட்டு விட்டுப் போனதால்தான் கோபமோ—என்ற பயம் அவனுக்கு! செல்வி அப்போதும் மௌனமாகவே இருந்தது.

செல்வியின் தந்தை அருகே சென்று அதன் கண்ணீரைப் பாசத்துடன் துடைத்தவாறே மீண்டும் கேட்டார்.

செல்வி மெதுவாக நிமிர்ந்து பார்த்து, "எனக்கு......எனக்கு ... வளையல் வேணும்.... அடுத்த வூட்டு முல்லை போட்டிருக்கிறது போல வேணும்" என்று வார்த்தைகளை மென்று விழுங்கிக் கொண்டு, திக்கித் திணறி ஒருவாறு கூறி முடித்தது!

செல்வியின் உள்ளக் கலக்கத்தின் காரணத்தைப் புரிந்து கொண்ட தந்தை "ப்பூ...! இவ்வளவுதானே! நாளைக்கே வாங்கிப் போட்டு விடுகிறேன்...! இதுக்காக யாராச்சும் அழுவாங்களா?" என்று கூறியவாரே, செல்வியை அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்!

"ஒரே மகள்—ஆசையுடன் கேட்கும்போது, கடன் வாங்கி யாவது செய்து போட்டுத்தான் தீரணும்" என்று அவரது வாய் முணுமுணுக்கவே செய்தது!

எது எப்படியோ, செல்வியின் கரங்களை மறுநாளே இரண்டு கல் இழைத்த தங்க வளையல்கள் அலங்கரிக்கத் தவறவில்லை! செல்வி தனக்குக் கிடைத்த அந்த வளையல்களை எல்லோரிடமும் காட்டிக் காட்டிப் பூரித்தது!

❋

இப்போதெல்லாம் செல்வி எங்குமே விளையாடச் செல்வதில்லை! விடிந்தால் பள்ளிக்கூடம் உண்டு, வீடு உண்டு-என்று இருந்து வந்தது. முத்துவுடன் கூட, அது விளையாடுவதில்லை! ஏன் தெரியுமா?

கல் இழைத்த தங்க வளையல்களை அணிந்துள்ள செல்வி, விளையாட வெளியில் சென்றால் எவனாவது 'திருடன்' அதை கழற்றிக் கொண்டு ஓடி விடுவானாம்! அதுமட்டுமல்ல, ஒருவேளை அதனுடைய உயிருக்கே ஆபத்து விளைந்தாலும் விளையலாமாம்!

இப்படிக் கூறி அதனுடைய காலுக்குத் தாளிட்டு விட்டனர், அதன் பெற்றோர்!

எப்போது பார்த்தாலும் ஓடி, திரிந்து, விளையாடி, சிரித்து, குறும்புகள் செய்து பொழுதைக் கழிக்கும் சுபாவம் கொண்ட அதற்கு இந்த ஆணை மிகப் பெரிய கொடுமையாகத் தெரிந்தது!

"என்ன வளையல்...! பெரிய வளையல்! திருடன் இதைத் தான் எப்போதும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கானுக்கும்" என்று அடிக்கடி, அது சலிப்புடன் கூறிக்கொண்டது! முத்துகூட, இப்போது அதை விளையாடக் கூப்பிடுவது இல்லை! "கூப்பிட்டால் அம்மாவையும்" என்று எண்ணியவனாக அவன் தனியாகவே, விளையாடப் போய் விடுகிறான்' செல்விக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை.

ஒரு நாள்...!

தொடர்ந்து பெய்த மழை அப்போதுதான் சற்று நின்றிருந்தது! தெருக்களில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கி நின்றது.

செல்வி மூன்றாவது வீட்டு வாசலுக்கு எதிரில் முத்து கப்பல் விட்டு விளையாடுவதையும், மற்ற சிறுவர்கள் ஈர மண்ணைக் கொண்டு மாளிகை கட்டி இடித்து சிரித்து மகிழ்வதையும் பார்த்தபடியே ஏக்கத்துடன் தன் வீட்டு வாசற்படியில் அமர்ந்திருந்தது! அதன் உள்ளம் அவர்களோடு தானும் விளையாட முடியவில்லையே என்ற வேதனையால் துடித்துக் கொண்டிருந்தது!

செல்வி தன்னுடைய அந்த ஆசையை அடக்க எவ்வளவோ முயற்சித்தும் ஏனோ அது அன்று 'அடங்க மாட்டேன்' என்று அடம் பிடித்தது!

செல்வி அவசர அவசரமாக எழுந்து உள்ளே ஓடியது. ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்த செல்வியின் அன்னை, தன் முன் கையைப் பிசைந்தவாறே நிற்கும் செல்வியை நிமிர்ந்து பார்த்தார்கள்!

செல்வி தயங்கிக் கொண்டே "நான் விளையாடப் போறேம்மா!" என்றது. அதைக் கேட்டவுடன் அன்னையாரோ தேள் கொட்டியவர்கள்போல துடித்தார்கள்.

"ஐயய்யோ! அதெல்லாம் கூடாது! நகை யெல்லாம் போட்டுகிட்டு வெளியே விளையாடப் போவலாமா? காலமே ரொம்பக் கெட்டுக் கிடக்குது!"

—என்ற தன் அன்னையை எரிச்சலுடன் பார்த்தது செல்வி! அதனுடைய விழிகளில் ஆத்திரம் சுடர்விட்டது!

தான் விரும்பிப் பெற்ற அந்தத் தங்க வளையல்கள் சுதந்திரமாக ஓடித் திரிந்த தனக்கு விலங்காகிவிட்ட வேதனையை, அது எண்ணிப் பார்த்தது! ஆம்; பளபளப்பான அந்த தங்க வளையல்கள் தனக்குத் தன் பெற்றோர்களால் இடப்பட்ட கொடிய 'விலங்குகள்' என்பதை அது புரிந்துகொண்டு விட்டது.

ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் தான் ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டது போல் அது பேசியது:

"ப்பூ...! இந்த நகைகளுக்காகவா என்னை விளையாட விடமாட்டேங்கிற...! இந்தா, இதை நீயே வச்சுக்கோ...!" என்று கூறியபடியே தன் வளையல்களை கழற்றி, தன் அன்னையின் மடியில் வீசிவிட்டு அவர்களது அனுமதியைக்கூட எதிர்பார்க்காமல் ஓடிவிட்டது!

"எனக்கும் ஒரு கப்பல் செய்துகொடு முத்து அண்ணா! நானும், தண்ணியில் விடுகிறேன்!" என்று முத்துவைக் கேட்டபடியே, அது மண்ணைக் குவித்து, கோபுரம் எழுப்பத் தொடங்கியது. செல்வியைக் கண்டதும் சிறுவர் சிறுமியருக்கு ஏக மகிழ்ச்சி—செல்விக்கு நல்ல வரவேற்பு! ●

தன்மானத் தம்பி!

● பணமில்லை; ஆகவே நல்ல உடைகள் இல்லை; நாகரிகத் தோற்றமில்லை; ஆனாலும் படிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருந்தது; படித்ததை 'சடக்' கென்று புரிந்துகொள்ளும் தனித் தன்மையும் இருந்தது; அந்த மாணவனுக்கு!

● ஒருநாள்...அந்த மாணவன் தனது அறைக் கதவைத் திறந்தபோது உள்ளே புதியதாக ஒரு ஜோடி உயர்ந்தரக 'பூட்சு' கள் அவனை வரவேற்றன. 'இது உனக்குத்தான்; எடுத்துக் கொள்' என்றும் அதன் அடியில் இருந்த காகிதத்தில் எழுதப் பட்டிருந்தது. ஆமாம்; அவனது கிழிந்த பூட்சைக் கண்ட யாரோ ஒரு சக மாணவன்தான் அந்த உதவியைச் செய்திருந்தான். ஆனால், அந்த மாணவனின் உள்ளத்தில் எங்கோ ஒரு மூலையில் புறப்பட்ட தன்மானம் அதை எதிர்த்தது!

● மறுநாள் பள்ளிக்குப் போய்விட்ட அவனது அறை வாசலில் முன் அந்த இரண்டு பூட்சுகளும் அப்படியே இருந்தன 'மன்னிக்கவும்: ஏற்றுக் கொள்ளமாட்டேன்!' என்ற வார்த்தைகளோடு!

● அந்த உயர்ந்த பண்பு பெற்றிருந்த மாணவன்தான் ஆங்கில இலக்கிய மேதையாகத் திகழ்ந்த டாக்டர் சாமுவேல் ஜான்சன்!

MURASOLI விலை 0-2-0

கடைசிப் பக்கம்

எழுத்தாணி

ஆர். கே. எஸ். ராஜன்; திருச்செந்தூர்.

(?) காமராசர் இப்போது திறந்திருக்கும் தனது வாயை எப்போது மூடுவார்?

தேர்தல் முடிந்து; ஓட்டுப் பெட்டிகள் திறந்து எண்ணப்பட்டவுடன் நிச்சயம் அவரது வாயும் மூடிவிடும்!

வி. சோமு; குடந்தை.

(?) திராவிடம் பிரிந்தால் அதைப் பாதுகாப்பதற்கு உங்களால் முடியுமா?

நல்ல கேள்வி ஐயா, இது! திராவிடத்தைப் பாதுகாப்பதற்குத் தானே நாங்கள் பிரிவினையே வேண்டுமென்கிறோம்!

10-ம் தேதி கிடைக்கும் காவியக் கொத்து!

முத்தாரம்

- நாவலர் நெடுஞ்செழியன் தரும் 'இலக்கிய இன்பம்'
- சொல்லின் செல்வர் சம்பத் தரும் 'குடியாட்சி'
- வழக்கம்போல் மு. க. வின் கவினெழுதும் கவிதை நடைச் சிறுகதை!

—மற்றும் உங்கள் கருத்தைக் கவர்ந்த எழுத்தோவியர்கள் அனைவரும் எழுதுகின்றனர்!

உதய சூரியன்

[முதல் பக்கத் தொடர்ச்சி]

கொள்கையை மாற்றிக் கொண்டு...ஒரு பெரியதலைவனின் சவத்தின்மீது காரி உமிழ்வது கண்டிக்கத் தக்கது!...இது முதல் தரமான துரோகம்!...

கந்த: ஏன்; துரோகம் உங்கள் கட்சியில் இல்லையா?...

கறு: எல்லாக் கட்சியிலும் இருக்கிறது! ... இராவணன் கூட்டத்திலே ஒரு விபீஷணன்! வாலியின் மாளிகையில் ஒரு சுக்ரீவன் – அனுமான்!...இப்படி இருப்பார்கள் ஒன்றிரண்டு துரோகிகள்!... ஆனால் தலைவனுடைய உயிர் இருக்கும் வரையில் அகில உலகத்திலும் அவனுக்குப் புகழ்மாலை சூட்டி, அவனி புகழ் தலைவன் இவன்தான் என்று முழக்கி, அவன் பிணமாக விழுந்ததும் அவனது மதிப்பையெல்லாம் கொத்தித் தின்னும் கழுகுகளாக ஒரு கட்சி முழுவதுமே மாறிவிட்டது என்றால்; அது உங்கள் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான் தம்பி! எதிர்க்கட்சிக்காரன், ஏன்; வேறுபட்ட கருத்துடையவன்—மறைந்து விட்ட பிறகு அவனுக்கு மதிப்பளிக்கும் பண்பு பெற்ற தமிழர்கள்; உங்கள் பொல்லாத போக்கை ஆதரிக்கவே மாட்டார்கள்!...

கந்த: என்ன தோழரே! மளமளவென்று பிரசங்கமே செய்து கொண்டு போகிறீர்!...

கறு: சும்மா ... லேட்டா ஒரு பாட்டில் சாப்பிட்டேன்; அதனாலே கொஞ்சம்தெம்பா பேசுறேன்—ஆனால் ஒன்று கந்தா! இவ்வளவும் குடி போதையில் பேசுறேன் என்று எண்ணாதே! உன்னை விடத் தெளிவாகவே இருக்கிறேன்; இப்போது!...

கந்த: சரி தோழரே! எலக்ஷன் எல்லாம் எப்படி யிருக்கு?

கறு: நமக்கு என்னப்பா எலக்ஷன் வேண்டிகிடக்கு! புதுசா வந்து புகுந்த திடீர்க் காங்கிரஸ்காரர்களுக்குத்தான் இப்ப ஓய்வே இல்லை! ஒரே அலைச்சல்! உங்க சேதி என்ன?

கந்த: நாங்க நிக்கப்போறோம்!...

கறு: ஆமாம்—அந்த திராவிட முன்னேற்றக் கழகம்கூட தேர்தலிலே குதிக்கப் போகிறதாமே; அதைப் பத்தி உங்க கட்சி என்ன நினைக்குது?

கந்த: தி. மு. கழகமா?...... அய்யோ! அந்த வார்த்தை சொல்லாதீர்!...அந்தப் பேரைக் கேட்பதே பாபம்!

கறு: ஏன்ப்பா ஏன்?...

கந்த: தெரியுமா சேதி?...அந்தக் கட்சித் தலைவர்கள் பேசும்போது எதுக்கெடுத்தாலும் பெண்களையே உதாரணமாப் பேசுறாங்க!...

கறு: புரியலிலே நீ சொல்றது?

கந்த: மறுநாள் திருமணமாகிற வாலிபனுக்கு முதல் நாள் ஏற்படுகிற மகிழ்ச்சி யிருக்கிறதே; அந்த மகிழ்ச்சி தான் திராவிட நாட்டு விடுதலையை நினைக்கும் போது ஏற்படுகிறது—அப்படின்னு ஒருத்தர் பேசுகிறார்! — இன்னொரு பெரிய தலைவர், சந்நியாசியைப் பார்த்து, ஒருத்தி உனக்கு எப்போது திருமணம் என்று கேட்டுக் கொண்டேயிருந்தால், அவன் ஒரு நாள் "சரி, திருமணம் செய்து கொள்கிறேன்" என்றுதான் முன் வருவான்! அதுபோலவே தி. மு. க. தேர்தலில் குதிக்கிறது என்று பேசுகிறார்!...

கறு: ஏன்...பேசியதில் என்ன தப்பு?...

கந்த: பெண்களைப் பற்றி உதாரணம் வருவதை நாங்கள் சர்வதேச ரீதியில் கண்டிக்கிறோம். எங்கள் கண்ணோட்டத்தில் அது சரியென்று படவில்லை!...

கறு: ஏன்; பெண் என்றால் உங்களுக்குப் பிடிக்காதா?...

கந்த: பிடிக்காமல் என்ன?... நாங்கள் எப்போதும் "அண்டர் கிரவுண்டி"லா வாழ்கிறோம்!...கல்யாணம் செய்து கொண்டும் வாழ்கிறோம்!

கறு: பிறகேன்—பெண் என்று பேசினால் மட்டும் பிடிக்கவில்லை!...

கந்த: இப்படியெல்லாம் அரசியல் விஷயங்களுக்கு பெண்களை உதாரணம் தரக்கூடாது என்கிறோம்!

கறு: என்னய்யா இது; அவதார விஷயத்துக்கே கம்பர் அள்ளி விட்டிருக்கிறார்; ஒரே பெண் வர்ணனையாக!......அதுவும் ஆபாசத்தின் எல்லைக் கோடு வரையிலே போயிருக்கிறார்! — இராமனைப் பிரிந்து அயோத்தி மக்கள் அழுத கண்ணீர் ஆறாக ஓடி...கன்னத்தில் வழிந்து, வயிற்று வழி வந்து, "அந்த" கடலுக்குள்ளே கலந்து விட்டது என்று வர்ணித்திருக்கிறார். அந்தக் கம்பராமாயணத்தை தூக்கி வைத்துக் கொண்டு குதிக்கிறீர்கள்—தி. மு. க. தலைவர்கள் நாகரீகமான முறையில் பெண்களைப் பற்றிய உதாரணம் கொடுத்தால் துடிக்கிறீர்களே; ஏன்?...

கந்த: ஓகோ......என்ன தோழரே!...நீங்க காங்கிரசுக்குள்ளேயே வளருகிற தி. மு. க. வா?...

கறு: நியாயம் பேசுகிறவன் எல்லாம் தி. மு. க. தான்!......நான் சொல்ல வந்ததை முழுவதும் கேள்!......பெண்கள் உதாரணம் பிடிக்கவில்லையென்கிறீர்களே; சட்டசபை விழாவிலே எல்லா எம். எல். ஏ.க்களும், வேடம்போட்டு ஆடினார்களே; அப்போது உங்க ராமமூர்த்தி மாத்திரம் ஏனய்யா பெண் வேஷம் போட்டுக் கொண்டார்?

கந்த: அது....அது...,அவருக்கு நல்ல "பர்சனலிடி" இருந்தது; அதனால் பெண் வேஷம் போட்டுக் கொண்டார்!...

கறு: எப்பா...அழகு என்றாலே என்ன வென்று உனக்கு அர்த்தம் சொல்ல வேண்டும் போலிருக்கிறதே!... நல்லவேளை; ராமமூர்த்தி நடனமும் ஆடாமற் போனாரே!...

கந்த: சும்மா இரும் தோழரே! உங்க காமராசர் பெரிய அழகோ?...

கறு: நான் அப்படிச் சொல்லவில்லையே; காமராசரோ மற்றவர்களோ பெண் வேஷம் போட முன் வரவில்லையே! "அழகு" என்று தவறாக எண்ணிக் கொண்டு நீங்கள்தானே அந்த வேஷம் போட்டிருக்கீங்க?...

கந்த: அது என்னமோ; தி. மு. கழகம் பெண்கள் உதாரணம் பேசுவதைக் கேலி செய்து, எங்கள் ஜனசக்தியில் எழுதியதை எடுத்து விடுதலைகூட வெளியிட்டிருக்கிறது!

கறு: அய்யோ பாவம்; விடுதலைக்குப் பெண்கள் என்றாலே பிடிக்காது!......... கந்தா!...விடுதலை ஆசிரியர் யார் தெரியுமா?...

கந்த: குருசாமி!...

கறு: அய்யோ; அது அவரே போட்டுக் கொள்வது; உண்மையான ஆசிரியர் ஒரு பெண்மணி!...பத்திரிகையை நன்றாகப் புரட்டிப்பார்; தெரியும்!...

கந்த: சரி; இருக்கட்டும்...அதனால் என்ன?...

கறு: பெண் உதாரணத்தை அவர்களும் கண்டிக்கிறார்கள் என்றாயே; அதற்குச் சொன்னேன்!...

கந்த: பிறகென்ன; திராவிட நாடு—என்ற லட்சியத்தை ஒரு பெண்ணுக்கா ஒப்பிடுவது?...

கறு: "வெங்காயம்" "சுண்டக்காய்" என்று ஒப்பிடுவதை விட இது எவ்வளவோ மேலப்பா!...

கந்த: சரி, சரி! நான் வருகிறேன்...எனக்கு நிறைய வேலையிருக்கிறது...

கறு: போ போ போ......... கிலிபிடித்த நெஞ்சினாய் போ போ போ!......

[கந்தன் போகிறான்]

(தொடரும்)

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6.